விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதின்நான்கு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 ஆவணி 07 ஞாயிற்றுக்கிழமை (23.08.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 247

சாரங்கா நகைமாடம்
157/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 6972
கிளை கொழும்பில்
உதயமாகியுள்ளது
சாரங்கா ஜுவலரி
இல.55, செட்டியார் தெரு,
கொழும்பு - 11
T.P.-0112434971 Fax - 0112434071
(C-2954)

## பொதுமக்களின் பாதுகாப்புக்கருதி

# வடக்கிலிருந்து இராணுவம் மீளப் பெறப்பட மாட்டாது

## பி.பி.சிக்கு இராணுவத்தளபதி செவ்வி



(கொழும்பு)

பொதுமக்களிற்கு நூறுவீத பாதுகாப்பினை வழங்குவதற்கும் அரசாங்கத்தின் எதிர்கால அபிவிருத்திப் பணிகளிற்கும் பெருமளவான படையினர் தேவைப்படுவதால் வடமாகாணத்திலிருந்து படையினரை மீள அழைப்பதற்கான திட்டம் எதுவும் இல்லை என இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய தெரிவித்தார். (14ஆம் பக்கம் பார்க்க)

## பிறப்புப் பத்திரம் இல்லாத மாணவர்களும் புலமைப்பரீட்சைக்கு தோற்றமுடியும்

(கொழும்பு)

பிறப்பு அத்தாட்சிப் பத்திரமின்றி இந்த முறை 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்காக விண்ணப்பிக்காத சகல மாணவர்களையும் பரீட்சைக்குத் தோற்றச் செய்வதற்குத் தேவையான விதிமுறைகளை மேற்கொள்ளுமாறு பரீட்சைகள் திணைக்களம் பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

பம்பலப்பிட்டி சிறுவர் நீதிமன்றத்தினால் நேற்று முன்தினம் வழங்கப்பட்ட தீர்ப்பொன்றின் (14ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. சபைக் கூட்டத் தொடர் ஜனாதிபதியின் பயணம் ரத்து

### குழுவினருக்கு விசா வழங்க நாடுகள் மறுப்பு

(கொழும்பு)

ஐ.நா. கூட்டத்தொடரில் ஜனாதிபதி தலைமையிலான 80 பேர் கொண்ட குழுவினர் கலந்து கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாடு இரத்து செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

எண்பதிற்கு மேற்பட்டோர் உள்ளடக்கப்பட்டிருந்த இந்தக் குழுவில் அமைச்சர்கள், அரச அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள் எனப் பல்வேறு தரப்பினர் உள்ளடக்கப் பட்டிருந்தனர்.

தென் (14ஆம் பக்கம் பார்க்க)

## ஏ-9 பாதை பஸ் சேவை

### முன் அனுமதி கிடைக்காவிட்டாலும் பஸ்ஸில் செல்ல ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து ஏ-9 வீதியூடாக வெளிமாவட்டங்களுக்குச் செல்லவுள்ளவர்கள் பஸ்ஸிற்கான முன் அனுமதி (ரோக்கன்) கிடைக்காவிட்டாலும் யாழ். புகையிரத நிலையத்திற்கு காலை 6 மணிக்கு வருகை தந்தால் அனுமதி வழங்கப்படுமென யாழ். சிவில் நிர்வாக ஒருங்கிணைப்பு அலுவலக இணைப்பாளர் மேஜர் சமந்த தெரிவித்துள்ளார்.

இது (14ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரனைக் காப்பாற்ற முடியாமைக்கு ஐ.நா. செயலர் பான் கீ மூனே காரணம்

### நோர்வேத் தூதுவர் குற்றச்சாட்டு

(நோர்வே)

ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ மூனின் செயற்பாடுகளின் காரணமாகவே தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை காப்பாற்ற முடியவில்லை என ஐக்கிய நாடுகளுக்கான நோர்வே தூதுவர் மோனா யூல் தெரிவித்துள்ளார் என திவயின செய்தி வெளியிட்டுள்ளது.

பிரபாகரனை காப்பாற்றுவதற்கு மேற்குலக நாடுகள் மேற்கொண்ட முயற்சிகள் தொடர்பில் ஐக்கிய நாடுகளின் நோர்வே பிரதிநிதி மோனா யூல் எழுதிய இரகசிய கடிதம் ஒன்று கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐ.நாவின் செயலாளர் பான் கீ மூன் தலைமைத்துவம் ஏற்க அருகதை இல்லாதவர், மற்ற நாடுகளின் விவகாரங்களில் தலையிடத் தெரியாதவர், கோபக்காரர் என பல குற்றங்களை ஐ.நாவுக்கான நோர்வே தூதுவர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாக நோர்வே ஒஸ்லோ (13ஆம் பக்கம் பார்க்க)

மாணவர்களை வாழ்த்துகின்றோம்

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு இன்று தோற்றவுள்ள அனைத்து மாணவர்களும் சிறந்த பெறுபேறுகளைப் பெற இறையாசி வேண்டி அவர்களுக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கல்விப் பிரிவு
வலம்புரி

உள்ளே...

✸ தமிழக ஜோதிடர் கலாமணி சிவல்புரி சிங்காரம் எழுதும் ஆவணி மாத ராசி பலன்கள்.

## புலிகளுக்கு எதிரான போரில் இந்தியா நேரடியாக ஈடுபட்டது

### அம்பலப்படுத்துகிறது போரில் இருந்து அமைதிக்கு என்ற நூல்

(டெல்லி)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரை இலங்கை அரசு வெற்றிகரமாக நடத்துவதற்கு, புலிகளின் ஆயுதக் கப்பல்கள் பற்றிய புலனாய்வுத் தகவல்களை வழங்கியது உட்பட மிக முக்கியமான, மூடிமறைக்கப்பட்ட பங்களிப்பை இந்தியா வழங்கியுள்ளது என்று சிறிலங்கா-போரில் இருந்து அமைதிக்கு என்ற நூலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலிகளுக்கு எதிரான போரில் இந்தியா வழங்கிய பங்களிப்புக் குறித்த விபரங்கள் முதல் தடவையாக அந்தப் புத்தகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

நித்தின் ஏ.கோகலே என்பவர் அந்த நூலை வெளியிட்டுள்ளார். போரில் இலங்கைக்கு பல வழிகளில் இந்தியா உதவி புரிந்தது எனினும் அவை அனைத்தும் மூடிமறைக்கப்பட்டன என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

பின்கதவுப் பேச்சுவார்த்தைகள், படைத்துறை தளபாடங்கள் வழங்கியதுடன் புலனாய்வுத்தகவல்களையும் வழங்கி அமைதியாக புலிகளுக்கு எதிரான கொழும்பின் போரை ஏற்றுக் கொண்டமை ஆகிய வழிகளில் இந்தியாவின் உதவிகள் (02ஆம் பக்கம் பார்க்க)

அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்களிற்கு ஓர் அறிவிப்பு
CEAT
சியாட் ரயரின் முன்னோடித் தயாரிப்புக்களான மோட்டார் சைக்கிள், ஓட்டோ ரயர்களினை
யாழ். மண்ணில் அறிமுகப்படுத்தி விற்பனை செய்யும் ஏக விநியோகஸ்தர்கள்
ஐங்கரன் மோட்டோர்ஸ்
யாழ்.வீதி, மானிப்பாய்.
(ஓட்டோ, மோட்டார் சைக்கிள் உதிரிப்பாக விற்பனையாளர்)
(C-3145)

# மனிதாபிமானமற்ற முறையில் தமிழ் மக்கள் முகாம்களில் தடுத்துவைப்பு

## ஐ.தே.க. குற்றச்சாட்டு; அரசு மறுப்பு

(கொழும்பு)

தமது சொந்த பந்தங்களுடன் நல்ல வாழ்வை தமிழ்ப் பெண்களும் குழந்தைகளும் வயது முதிர்ந்தவர்களும் வாழ்வதை எப்படி அரசு தடுக்க முடியும் என்று ஐக்கிய தேசியக் கட்சி கேள்வி எழுப்பியுள்ளது.

முகாம்களில் உள்ள 2 இலட்சத்து 80 ஆயிரம் மக்கள் மனிதநேயம் அற்ற நிலையில் வைக்கப்பட்டுள்ளார்கள் என்று ஒருசில நாட்களுக்கு முன்னர் எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டி இருந்தன.

அது தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் அனைத்துலக வர்த்தக அமைச்சர் ஜி.எல். பீரிஸ் ;

குற்றஞ் சாட்டுவது மிகச் சுலபம். ஆனால் அரசு மிகக் கடுமையான பணியை சிரமங்களுக்கு மத்தியில் ஆற்றி வருகின்றது என்றார்.

ஏதாவது தவறுகள் இருந்தால் அவற்றை நாம் திருத்திக்கொள்வதற்கு தயாராகவே இருக்கின்றோம். ஆனால் இடம்பெயர்ந்த மக்களை நல்ல முறையில் கவனித்துக்கொள்வதற்கு மிகப்பெரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை எல்லோரும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு நாளும் குறைந்தது 10 இலட்சம் பேருக்கு உணவு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

உறவினர்களுடனோ அல்லது வெளிநாடுகளுக்குச் சென்றோ வாழ்வதற்கு தம்மை அனுமதிக்கும்படி முகாம்களில் உள்ள மக்கள் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்கள் என்று கூறப்படுவது குறித்துக் கருத்துத் தெரிவித்த ஊடகத்துறை அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா;

இது எல்லாம் எதிரணி அரசியல்வாதிகளால் பரப்பப்படும் வதந்திகள் என்றார். ஒரு அரசாக எங்களால் முடிந்ததை சிறப்பான முறையில் நாம் செய்கின்றோம். இடம்பெயர்ந்த மக்களில் சிலர் ஏற்கனவே மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

முகாம்களில் பலவந்தமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள 1 இலட்சத்து 75 ஆயிரம் பெண்கள், குழந்தைகள், வயது முதிர்ந்தவர்கள் ஆகியோரை இலங்கையிலோ அல்லது வெளிநாடுகளிலோ உள்ள அவர்களது உறவினர்களுடன் சேர்ந்து வாழ்வதற்கு அரசு அனுமதிக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

திகைப்பூட்டும் சூழ்நிலைக்குள் இடம்பெயர்ந்த மக்களைப் பலவந்தமாக தடுத்து வைத்திருப்பதன் மூலம். அவர்களது அடிப்படை உரிமைகளை அரசு மீறுகிறது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல குற்றஞ்சாட்டி உள்ளார்.

எந்த சட்டங்களின் கீழ் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்? என அவர் கேள்வி எழுப்பினார்.

விடுதலைப் புலிகள் இயக்க சந்தேக நபர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தால் அவர்களை புரிந்துகொள்ளலாம். அப்பாவிப் பெண்களும் குழந்தைகளும் வயது முதிர்ந்தவர்களும் அவர்களின் சொந்த பந்தங்களுடன் நல்ல வாழ்க்கை வாழ்வதை அரசு எப்படித் தடுக்க முடியும்? என்றும் அவர் மேலும் வினாவினார். (ந-5)

## பகுதி நேர ஆங்கில ஆசிரியர் நாளை சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களின் நிரந்தர நியமனத்தை உறுதிப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை காலை 9.00 மணிக்கு யாழ்.உயர் கலைக் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக பகுதி நேர ஆங்கில ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

எனவே இக் கலந்துரையாடலுக்கு அனைத்து பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ந)

# முகாம்களில் நோய்வாய்ப்பட்ட சிறுவர்கள் சிகிச்சைக்காக வெளியில் செல்ல பாதுகாப்புத்தரப்பு அனுமதி மறுப்பு

## மாவை.சேனாதிராஜா குற்றச்சாட்டு

(கொழும்பு)

இடம்பெயர்ந்து முகாமில் தங்கியுள்ள சிறுவர்களில் நோய்வாய்ப்பட்ட சிறுவர்களை சிகிச்சைக்காக முகாம்களிற்கு வெளியில் அழைத்துச் செல்லுமாறு மருத்துவர்கள் ஆலோசனை வழங்கியுள்ளபோதிலும் பாதுகாப்புத் தரப்பினர் அதற்கு அனுமதி மறுத்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

வடக்கில் இடம்பெயர்ந்தோர் தடுத்து வைக்கப்பட்டுள்ள முகாம் சூழலில் பெய்து வரும் கடும் மழை காரணமாக முகாம்களுக்கு செல்லும் பாதைகளை போக்குவரத்துக்காக பயன்படுத்த முடியாத நிலைமையில் சேறும் சகதியுமாக காணப்படுகின்றது.

இந்த நிலைமையில் மருத்துவ சேவைகளை வழங்குவது கடினமாக உள்ளதால் முகாமில் நோய்வாய்ப்பட்டவர்களின் நிலைமைகள் வாழமுடியாதளவில் மோசமாக இருப்பதால் மருத்துவர்கள் அவர்களை வெளியில் அழைத்துச்சென்று சிகிச்சை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

சுற்றாடல் மற்றும் சுகாதார வசதிகளின்றி வடக்கில் இடம்பெயர்ந்துள்ள மக்கள் பெரும் துயரங்களை எதிர்நோக்கியுள்ளனர். இவ்வாறான நிலைமையில் பாதுகாப்புத் தரப்பினர் இந்த மக்களுக்கு கடும் அழுத்தங்களைப் பிரயோகித்து வருவதால் எதிர்காலத்தில் இடம்பெயர்ந்தோருக்கும் படையினருக்கும் இடையில் மோதல்கள் ஏற்படக்கூடும் எனவும் மாவை. சேனாதிராஜா சுட்டிக்காட்டி உள்ளார்.

இதுகுறித்து இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார கருத்துத் தெரிவிக்கையில்;

முகாம் சூழலில் சகல மருத்துவ வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாகவும் எவரும் முகாமைவிட்டு வெளியில் செல்ல முடியாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

முகாமில் உள்ள எவருக்கேனும் சிறப்பு சிகிச்சைகள் அளிக்கப்பட வேண்டும் என மருத்துவர்கள் பரிந்துரைத்தால் முகாமில் இருந்து வெளியில் செல்ல வசதிகள் செய்து கொடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (ந-5)

# புலிகளுக்கு எதிரான போரில்...

அமைந்திருந்தன என்றே பொதுவாக எண்ணப்படுகின்றது. ஆனால், எண்ணற்ற வழிகளில் சிறிலங்காவுக்கு உதவிகளை வழங்கியது இந்தியா என்கிறார் கோகலே.

அவரது நூலில் தெரிவிக்கப்பட்டுள்ள சில விபரங்கள் வருமாறு :

உள்நாட்டில் எழுந்த கடும் எதிர்ப்புக்களை அடுத்து, சிறிலங்காவுக்கு தாக்குதல் ஆயுதங்கள் எதனையும் தான் விற்பனை செய்யவில்லை என்று இந்தியா வெளிப்படையாகத் தெரிவித்து வந்தாலும், சத்தம் போடாமல் தாக்குதல் ஆயுதங்கள் உட்பட பல்வேறு உதவிகளை அது வழங்கியுள்ளது.

2006 ஆம் ஆண்டு முற்பகுதியில் இந்தியா 5 எம்.ஐ. - 17 ரக உலங்கு வானூர்திகளை சிறிலங்கா வான்படைக்கு வெகுமதியாக வழங்கியிருந்தது.

இந்தியா விதித்த ஒரேயொரு நிபந்தனை என்னவெனில், அந்த உலங்குவானூர்திகள் இலங்கை வான்படை வானூர்திகளின் நிறத்திலேயே பறக்க வேண்டும் என்பது தான். தனது கூட்டாளியான திராவிட முன்னேற்றக் கழகத்தை தேவையற்ற சங்கடங்களுக்கு உட்படுத்த ஐக்கிய மக்கள் முற்போக்குக் கூட்டணி அரசு அப்போது விரும்பவில்லை.

2002 ஆம் ஆண்டில் சுகன்யா என்ற ஆழமற்ற கடலில் பயணிக்கக்கூடிய சுற்றுக் காவல் கப்பலை இந்திய கரையோரக் காவல் படை சிறிலங்கா கடற்படைக்கு வழங்கியது.

சிறிலங்கா ஆழ ஊடுருவும் படையணிகள் விடுதலைப்புலிகளின் ஊடறுப்புத் தடுப்புப் படையணிகளால் சுற்றிவளைக்கப்பட்ட சமயங்களில் எல்லாம் இந்த கடற்கலம் முக்கியமான உதவிகளை அரச படையினருக்கு வழங்கியுள்ளது.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த ஆழமான பகுதிகளுக்குள் காயமடைந்த படையினரை வான் வழியாக எடுத்துச் செல்வதற்கும் இந்தக் கடற்கலம் முக்கிய உதவியையும் பங்களிப்பையும் வழங்கியுள்ளது.

கடற்புலிகளின் முதுகு எலும்பை உடைப்பதில் இந்திய மற்றும் சிறிலங்காப் படையினருக்கு இடையில் 2006 முதல் 2009 ஆம் ஆண்டு வரை மிகச் சிறந்த முறையிலான ஒருங்கிணைப்பு செயற்பாடுகள் இருந்துள்ளன.

சிறிலங்கா கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட, விடுதலைப் புலிகளின் குறைந்தது 10 ஆயுதக் கப்பல்களையாவது தமது படையினர் அழித்தனர் எனத் தெரிவித்திருந்தார். அந்தக் கப்பல்களில் ஆயுதங்கள், வெடிபொருட்கள் மற்றும் கவச வாகனங்கள் ஏற்றப்பட்டிருந்தன. இந்த நடவடிக்கைகளில் இந்தியக் கடற்படையின் ஒத்துழைப்பை கரன்னகொட குறிப்பிட்டுச் சொல்லி இருந்தார்.

தமிழ் நாட்டின் ராம்நட் என்ற இடத்தில் பொருத்தப்பட்டிருந்த கடற்படைக் கருவிகள் மூலம் சிறிலங்காவின் கடற்பிராந்தியம் ஒரு நாளைக்கு சில தடவைகள் என்றாலும் தீவிர கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டன. அது தொடர்பான தகவல்கள் சிறிலங்காவுக்கு வழங்கப்பட்டன.


எப்போது எல்லாம் சந்தேகத்திற்கிடமான கப்பல்களின் நடமாட்டம் தென்படுகிறதோ உடனடியாக அது பற்றிய தகவல்களை இந்திய கடற்படை சிறிலங்காவுக்கு அறிவிக்கும். இந்த உடனடி உளவுச் சேவையால் விழிப்புப் பெறும் சிறிலங்கா கடற்படையினர் பின்னர் புலிகளின் கப்பல்களைத் தேடிச் சென்று தாக்கியழிப்பார்கள். இவ்வாறு கோகலே தனது புத்தகத்தில் தகவல்களை வழங்கியுள்ளார். விடுதலைப்புலிகளின் கடைசி நாட்கள் பற்றிய விபரங்களும் புத்தகத்தில் வழங்கப்பட்டுள்ளன.

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியைக் கொலைசெய்ய எடுத்த முடிவே புலிகளின் தலைவரது போர்த் தந்திரங்களில் ஏற்பட்ட மிகப்பெரும் பின்னடைவாகும் என்று கோகலே கூறியுள்ளார்.

புலிகளுக்கு எதிரான போரை சிறிலங்கா வெற்றி கொள்வதற்கு ஏதுவாக இருந்த அதனது போர்த் தந்திரங்கள் பற்றிய விபரங்களையும் அந்த நூலில் கோகலே வெளிப்படுத்தியுள்ளார். (ந-5)

# நல்லூர் முருகன் திருவிழா சிறப்பாக நடைபெற்றது

## 51 வது படைத் தலைமையகம் தெரிவிப்பு





நல்லூர் முருகன் மகோற்சவத்தின் போது இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து தேவையான பாதுகாப்பு மற்றும் ஒழுங்கு நடைமுறைகளை மேற்கொண்டதாக 51-வது படையணியின் தலைமையகம் விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் விபரம் வருமாறு:

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த பெருந்திருவிழா இம் முறையும் வெகு சிறப்பாக நடைபெற்றது. கடந்த மாதம் 27 ஆம் திகதி ஆரம்பமான திருவிழா இம் மாதம் 22 ஆம் திகதி வைரவர் திருவிழாவுடன் நிறைவு பெற்றது.

யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து யாழ். குடாநாட்டில் ஏற்பட்ட சமாதான சூழலை அடுத்து பெருந் தொகையான பக்தர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டமை சிறப்பம்சமாகும். திருவிழா ஆரம்பமான நாள் முதல் விழா நிறைவு பெறும் வரை 51-வது படையணியைச் சேர்ந்த இராணுவமும் பொலிஸாரும் இணைந்து தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தமையால் பாரிய அசம்பாவிதங்கள் ஏதுமின்றி தமக்கு வழிபாடுகளை மேற்கொள்ள முடியுமாக இருந்ததாக மக்கள் தமது அபிப்பிராயத்தைத் தெரிவித்தனர். மேலும் பெருமளவு பக்தர்கள் தடையின்றி திருவிழாவில் கலந்து கொள்ளும் பொருட்டு ஊரடங்குச் சட்டமும் பாதுகாப்புத் தரப்பினரால் முழுமையாக தளர்த்தப்பட்டது.

மேலும் 51-வது படையணியை சேர்ந்த இராணுவத்தினர் திருவிழாக் காலங்களில் சிற்றுண்டி, குளிர்பான தாக சாந்தி நிலையங்கள் அமைத்து பக்தர்களுக்கு தமது ஒத்துழைப்பை வழங்கியதுடன் தென்பகுதியில் இருந்து கொண்டு வரப்பட்ட மலர்களை விமானப்படையினர் ஹெலிகொப்டர் மூலம் வானிலிருந்து கந்தனுக்குத் தூவி ஆசிர்வாதம் பெற்றனர்.

இம்முறை இத்திருவிழாவில் தென்பகுதியைச் சேர்ந்த பக்தர்கள் சிறிய தொகையினரே கலந்து கொண்டதுடன் அடுத்த வருடம் நடைபெறவிருக்கும் திருவிழாவில் தென் பகுதியில் இருந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொள்வதற்கு வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பதே பாதுகாப்புத்தரப்பினரின் ஒரே பிரார்த்தனையும் குறிக்கோளுமாகும் என அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## கற்பித்தல் செயலமர்வு

(சாவகச்சேரி)

யுனிசெப் அனுசரணையுடன தென்மராட்சி பாடசாலைகளில் ஆரம்ப வகுப்புகளுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான ''பிள்ளை நேய கற்பித்தல் முறையியல்'' பயிற்சி செயலமர்வுகளின் 3ஆம்,4ஆம் கட்ட பயிற்சிகள் கடந்த 21 ஆம் திகதி ஆரம்பமாகி எதிர்வரும் 24,25,26,27,28 ஆகிய திகதிகளில் நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் காலை 8.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் ஆரம்ப வகுப்புகளிற்கு கற்பிக்கும் ஆசிரியர்களை தவறாது சமூகமளிக்குமாறு தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (4-29)

## விடுமுறைகால செயலமர்வு

(அல்வாய்)

வடமராட்சி வலய பாடசாலைகளில் தரம் 6 முதல் 11 வரை வரலாறு பாடம் கற்பிற்கும் ஆசிரியர்களுக்கான நவீன கற்பித்தல் உத்திகள் செயலமர்வு எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரிய வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்விற்கு குறித்த ஆசிரியர்களை தவறாது சமூகமளிக்குமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (ஓ-4-19)

## பகிரங்க ஏல விற்பனை

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் மாவட்ட நீதிவான் நீதிமன்றினால் பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமை கோரப்படாததுமான துவிச்சக்கரவண்டிகள், மோட்டார் சைக்கிள்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள், வானொலிப் பெட்டிகள் உட்பட வேறு சில பொருட்களும் பகிரங்க ஏலத்தில் இம்மாதம் 29 ஆம் திகதி சனிக்கிழமை 10 மணிக்கு விற்பனை செய்யப்படவுள்ளன.

மேற்படி பொருட்களை அன்றையதினம் அரை மணித்தியாலத்திற்கு முன்னர் பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்படும் எனவும், ஏலத்தில் வாங்கப்படும் பொருட்களுக்கு உடன் பணம் செலுத்தி நீதிமன்ற வளவிலிருந்து அப்புறப்படுத்தப்பட வேண்டும் எனவும், பொருட்களை ஏலத்தில் கோருபவர்கள் தேசிய அடையாள அட்டையினை கொண்டு வர வேண்டும் எனவும் மல்லாகம் மாவட்ட நீதவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். ஓ

## திருநெல்வேலி வானிலை அவதானிப்பு மையத்தை நவீனமயப்படுத்த யப்பான் நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி வானிலை அவதானிப்பு மையத்தை சர்வதேச ரீதியாக நவீனமயமாக்குவதற்கு யப்பான் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

திருநெல்வேலி அவதானிப்பு நிலையத்தில் உள்ள பல குறைபாடுகளை நிவர்த்தி செய்வதன் நோக்கமாக கொழும்பு வளிமண்டலவியல் திணைக்களத்திற்கு விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க இவ் நிலையத்தை தன்னியக்க அவதானிப்பு மையமாக நவீனமயப்படுத்த யப்பான் இணக்கம் தெரிவித்துள்ளது.

இதற்கான ஆரம்பக்கட்ட ஆய்வுகளை மேற்கொள்ள கொழும்பு வளிமண்டலவியல் திணைக்களத்தின் பொறியியலாளர்கள் அடங்கிய விசேட குழு ஒன்று ஒக்ரோபர் மாதம் அளவில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளது.

இவ் நவீன வளிமண்டலவியல் மையம் நிறுவப்பட்டதன் பின்னர் தன்னியக்க இணையத்தள வசதிகளுடன் குடாநாட்டின் வானிலைத் தரவுகளை துல்லியமாக சர்வதேச ரீதியாக அவதானிக்கக் கூடியதாக அமையும் என திருநெல்வேலி வானிலை அவதானிப்பு நிலைய பொறுப்பதிகாரி வி. புஸ்பநாதன் தெரிவித்துள்ளார். (ஓ-7)

## மஹோற்சவம்

ஊர்காவற்றுறை நாரந்தனை வடக்கு பண்டாரபுலம் தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 2ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 1 மணிக்கு வேட்டைத்திருவிழாவும், 3 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு இரதோற்சவமும், மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு சமுத்திரதீர்த்தமும் இடம் பெறவுள்ளது. (ஓ-4)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 35 | 45 | 20 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 80 |
| பச்சைமிளகாய் | 40 | 50 | 40 |
| தக்காளி | 15 | 20 | 15-20 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 50 |
| கோவா | 60 | 80 | 100 |
| கரட் | 120 | 140 | 90 |
| பூசணி | 30 | 40 | 25 |
| புடோல் | 20 | 30 | 20 |
| வாழைக்காய் | 30 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 40 | 50 | 50 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 60 |
| பாகற்காய் | 30 | 40 | 30 |
| வெண்டிக்காய் | 20 | 30 | 30 |
| கரணைக் கிழங்கு | 40 | 50 | -- |
| பயிற்றங்காய் | 50 | 60 | 30 |
| லீக்ஸ் | 50 | 60 | 80 |
| பீற்றூட் | 30 | 40 | 40 |
| கறிமிளகாய் | 30 | 40 | 40 |
| முருங்கைக்காய் | 100 | 120 | 100 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 15 |
| தேசிக்காய் | 30 | 40 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 30 | 25 |

## வாரம் ஒரு தகவல்

### மாமியார்

''ஏன் இப்படி குளத்தங்கரையில் வந்து அழுதுகொண்டு நிற்கிறாய்?''

''என்னுடைய மாமியார் நாளைக்கு ஊருக்குப் போகப் போகிறாவாம்.''

''ஆச்சரியமாக இருக்கே! இந்தக் காலத்தில் இப்படியும் ஒரு மருமகளா?''

''உனக்கும் கல்யாணம் ஆனாத்தெரியும்''

''ரொம்பக் கொடுத்து வைத்த மாமியார். அதுசரி... இதற் குப் போய் யாராவது அழுவார்களா?''

''என்ன செய்வது? என்னால் கட்டுப்படுத்த முடியவில்லையே!''

''சின்ன விடயத்துக்கெல்லாம் உன்னை மாதிரி சிலர் மிகவும் உணர்ச்சி வசப்படுகிறார்கள். அது உடம்புக்குக் கெடுதல்.''

''அப்படியா?''

''ஆமாம். உணர்ச்சி வசப்படுவதால் உடல் நலம் பாதிக்கப் படுகிறதாம். உணர்ச்சி வசப்படுவததைக் குறைப்பதற்கு புதிதாக ஒரு ஓமோன் கூடக் கண்டுபிடித்திருக்கிறார்களாம்!''

''எங்கே?''

''இங்கிலாந்திலுள்ள எடின்பரோ நகரத்தைச் சேர்ந்த டாக் டர் ஒருவர் இதை உருவாக்கியிருக்கிறார்.''

''அது என்ன செய்யும்?''

''இந்த ஓமோனை உடம்பில் செலுத்தியவுடன் அது பிட்யூட்டரி சுரப்பி மூலமாக செயற்பட்டு உணர்ச்சி வசப்படுவதைக் குறைத்து விடுகிறதாம்.''

''பரவாயில்லையே... நம் நாட்டிற்கு வந்தால் இது எனக்கு அடிக்கடி உபயோகப்படும்.''

''தெரியாமல் தான் கேட்கிறேன்... உன் மாமியார் நாளைக்கு ஊருக்குப் போகிறேன் என்று சொன்னதும் நிஜ மாகவே உனக்கு அழுகை வந்துவிட்டதா?''

''ஆமாம்.''

''அது எப்படி?''

''இன்றைக்கே ஊருக்கு கிளம்புவா என்றல்லவா நான் நினைத்துக் கொண்டிருந்தேன். அந்த சமயத்தில் அவா அப்படிச் சொன்னால் அழுகை வராதாபின்னே!''

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## இராசி பலன்

23.08.2009
(ஆவணி 7, ஞாயிற்றுக்கிழமை)
திருதியை முற்பகல் 10.52 மணிவரை
உத்தரம் முற்பகல் 7.39 மணிவரை
இராகுகாலம் 4.35-6.05 மணிவரை
சுபநேரம் 9.05-10.35 மணிவரை
முதலாம் ஆவணி ஞாயிறு
விநாயகர் சதுர்த்தி விரதம்

| | |
|---|---|
| மேடம் | சுவாரஸ்யம், தொழில் விருத்தி, முயற்சி கைகூடும், உடல் நலம். |
| இடபம் | பணக்குறைவு, காரிய 'இடையூறு, அஜீரண ரோகம், குடும்பக் கவலை. |
| மிதுனம் | தன்னம்பிக்கைக் குறைவு, தொழில் நன்மை, ரோகநிலை, பிரயாணம். |
| கடகம் | மனோதைரியம், நற்கீர்த்தி, முயற்சி கைகூடும், தனவருவாய். |
| சிங்கம் | போசன சுகக்குறைவு, மனஸ்தாபம், உஷ்ணநிலை, காரிய தாமதம். |
| கன்னி | வெகுமானம், நல்ல முயற்சி, மாதர் நட்பு, போசன சுகம். |
| துலாம் | பிறருக்கு உதவுதல், பிரயாணம், மனஸ்தாபம், முயற்சி தாமதம். |
| விருச்சிகம் | எதிர்பாராத நன்மை, காரிய நன்மை, நண்பர்கள் சந்திப்பு, குடும்ப சுகம். |
| தனுசு | மேன்மை, காரிய அனுகூலம், ஆரோக்கியம், விருந்துபசாரம். |
| மகரம் | புதிய திட்டமிடல், பிரயாணம், தந்தை வழி உறவு, மனஸ்தாபம். |
| கும்பம் | மரியாதைக்குறைவு, முயற்சி தாமதம், வாகனபயம், உடல்நலக் குறைவு. |
| மீனம் | களஸ்திர நன்மை, முயற்சி கைகூடும், போசன சுகம், கீர்த்தி. |

வளவன்

## சம்பத் வங்கியின் 120 ஆவது கிளை நாளை திறப்பு

யாழ் ஸ்ரான்லி வீதியிலிருந்து நகருக்கான இணைப்பு வீதியில் 56/16 இலக்க கட்டடத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சம்பத் வங்கியின் 120 ஆவது கிளை நாளை திங்கட்கிழமை காலை 8.45 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது. (ஓ-4)

## இரங்காதோ மனம்?

விரைந்தோடும் மனிதர்களே
சற்றே நில்லுங்கள்!
தயவோடு வேண்டுகோள் ஒன்று
உங்கள் உல்லாசங்களில்
ஒரு துளியை தியாகங்களாக்குங்கள்
உங்கள் தியாகங்களில் ஒருதுளி
அகதிகளான எம் உறவுகளின்
உணவின் ஒருபிடி
உந் துருளியின் வயிறு நிரப்பி
ஊர்வலம் வருகின்றீர் - பசியால்
நொந்து வதங்குவோரின்
வயிற்றை நிரப்ப ஏன் மறந்தீர்?
மதுவுக்குக் கொட்டும் பணத்தில்
கொஞ்சம் - மனம்
வெதும்பும் எம் உறவுகளுக்கும்
போனாலென்ன?
புகைத்தலிலே புகையும் காசு - வயிறு
புகைந்து பதைக்கும்
எம்மவர்க்குக் கிடைத்தாலென்ன?
தொலைபேசி உறிஞ்சும்
பணம் - அவர்கள்
உலையேற உதவக்கூடாதோ?
செய்வீர்களா...?

தமிழுக்கடியவன்

## தறப்பாள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யு.என். எச்.சி. ஆர் அனுசரணையுடன் நல்லூர் பிரதேச செயலக பிரிவில் உள்ள நலன்புரி நிலையங்களில் தங்கி வாழும் 42 குடும்பங்களுக்கு தறப்பாள்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 5 ஆம் திகதி நல்லூர் பிரதேச செயலகத்தில் வைத்து ஒரு குடும்பத்திற்கு ஒரு தறப்பாள் வீதம் வழங்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலகத்தினர் தெரிவித்துள்ளனர். (ஓ-4)

## சுவர்ணயெஜந்தி வசந்தவிழா பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியின் சுவர்ண ஜெயந்தி வசந்தவிழா எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 14 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

எனவே இவ்விழாவிற்கான ஆயத்த ஏற்பாடுகளை மேற்கொள்ள சகல மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு யாழ் தொழில்நுட்பக் கல்லூரி பணிப்பாளர் ந. யோகராஜன் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும் மேற்படி விழா ஆகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை நடைபெற இருந்தமை குறிப்பிடத்தக்கது. எனினும் சர்வதேச தொழில்நுட்பவியல் மாநாடு நடைபெறுவதும் கொழும்பிலிருந்து இவ்விழாவிற்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்வதில் தாமதம் ஏற்பட்டமையுமே இவ்விழா பிற்போடப்பட்டமைக்கான காரணமென யாழ். தொழில்நுட்பக் கல்லூரியின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஓ-4-30)

# பேரூந்து - சிற்றூர்தி போட்டி பொதுமக்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

இ.போ.ச. பேருந்திற்கும் தனியார் சிற்றூர்திகளுக்கும் இடையில் இடம் பெறும் போட்டியின் நிமித்தம் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்குகின்றார்கள்.

குறிப்பிட்ட வாகனங்கள் போட்டி போட்டுக் கொண்டு முந்திச் செல்ல முற்படுதலும் அதனைத் தடுப்பதற்கான வழிகளையும் மேற்கொள்ளும் போது பாடசாலை மாணவர்கள், வைத்தியசாலை செல்பவர்கள் மற்றும் அலுவலகங்களுக்கு செல்பவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள்.

எனவே குறிப்பிட்ட பிரச்சினையில் இருந்து தீர்வு கிடைக்குமா என மக்கள் கவலை தெரிவிக்கின்றார்கள்.

கடந்த வெள்ளிக்கிழமை காலையில் 782 பேரூந்துக்கும் 782 சிற்றூர்திக்கும் இடையில் மூளாயில் இருந்து சண்டிலிப்பாய் வரை இடம்பெற்ற கடும் போட்டியின் காரணமாக பாதிக்கப்பட்ட ஒருவர் இவ்வாறு வேதனை தெரிவித்துள்ளார். (ஓ)

# வாள் வெட்டுக்கிலக்காகிய குடும்பஸ்தர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

அயல் வீட்டுக்காரர்களிடையே நீண்ட காலமாக நிலவி வந்த பகை வாள் வெட்டில் முடிவடைந்துள்ளது. இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் நீர்வேலி ஆசரவேலுவில் இடம்பெற்றுள்ளது.

வாள்வெட்டிற்கு இலக்கானவராக கருதப்படும் நீர்வேலியை சேர்ந்த விஜய்காந்தன் தவராசா (வயது27) என்ற குடும்பஸ்தரே காலிலும் நெஞ்சுப் பகுதியிலும் பலத்த வெட்டுக் காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

4 பிள்ளைகளின் தந்தையான இவர் நேற்று மாலை தமது தொழிலை முடித்துக் கொண்டு வீடு திரும்பிக் கொண்டிருந்ததாகவும் அவ்வேளை நீண்ட காலமாக முரண்பட்டுக் கொண்டிருந்த அயல் வீட்டுக்காரர்கள் இருவர் மது அருந்துவிட்டு வாளால் வெட்டி காயப்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

படுகாயங்களுக்குள்ளான குறித்த நபர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஓ-30)

## கடற்றொழிலாளர் விழிப்புணர்வு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

ஹற்றன் நஷனல் வங்கியின் வணக்கம் யாழ்ப்பாணம் என்ற தொனிப் பொருளில் நடத்தப்பட்டுவரும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கடற்றொழிலாளர் விழிப்புணர்வுக் கருத்தரங்கு இன்பருட்டி சனசமூக நிலையத்தில் நெல்லியடி ஹற்றன் நஷனல் வங்கியின் முகாமையாளர் கே. ஸ்கந்தபாபு தலைமையில் நடைபெறவுள்ளது. (ஓ-4)

## பரீட்சைப் பெறுபேறுகள் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புக்கள் பீடத்தினால் நடத்தப்படும் சனத்தொகை அபிவிருத்தி கற்கைநெறி முதலாம் தவணைப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவந்துள்ளன. இவர்களது பெயர்பட்டியல்கள் யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீட அலுவலக விளம்பரப் பலகை யில் பார்வையிடலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-134)

## ஆங்கில பாட செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

தீவகக் கல்வி வலயத்தில் ஆங்கிலபாடம் கற்பிக்கும் வேறு வகையிலான நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கான பயிற்சிச் செயலமர்வு நாளை திங்கட்கிழமை மு.ப. 8.00 மணிக்கு யா/ வண். நாவலர் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் ஏற்கனவே கடிதம் கிடைக்கப்பெற்ற ஆசிரியர்களை இச் செயலமர்வில் தவறாது பங்குகொள்ளுமாறு தீவக வலய ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர் க. கதிரேசபிள்ளை கேட்டுள்ளார். (ஓ)

## கட்டுநாயக்க விமான நிலையத்தில் விசேட ஸ்கானர் இயந்திரம்

(கொழும்பு)

வெளிநாடுகளிலிருந்து இலங்கை வருவோருக்கு H1V1 வைரஸ் தொற்று உள்ளதா என்பது குறித்துப் பரிசோதனை செய்யப்படும். இந்தப் பரிசோதனைக்கென கட்டு நாயக்க சர்வதேச விமான நிலையத்தில் விசேட ஸ்கேன் இயந்திரம் ஒன்று பொருத்தப்பட்டுள்ளது.

இத்தகவலை ஐ.டி.எச் வைத்தியசாலை டாக்டர் ஒருவர் தெரிவித்தார். நாட்டில் பன்றிக் காய்ச்சல் பரவுவதைத் தடுப்பதற்காகவோ இந் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஓ-6)



வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் 2009/2010 ஆம் ஆண்டிற்கான பதவி ஏற்பு வைபவத்திற்கு சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட கணக்காளர் லயன் கே.தணிகாசலம் மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் பிரதம விருந்தினர் லயன் ரவீந்திரா நிற்பதையும் இவ்வாண்டிற்கான தலைவராக லயன் எஸ்.சிவநாதன் பிரதம விருந்தினர் முன்னிலையில் பதவியேற்பதையும் படங்களில் காணலாம்.

# தளபாட வசதிகள் இல்லாததால் தரையிலிருந்து பரீட்சை எழுதும் இடம்பெயர்ந்த மாணவர்கள்

(கொழும்பு)

வவுனியா இடைத்தங்கல் முகாம்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 300 மாணவாகள இம்முறை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ளதாக வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி வீ. ஆர் ஏ. ஒஸ்வெல்ட் தெரிவித்துள்ளார்.

மேற்படி மாணவர்களுக்கு அவர்கள் தங்கியுள்ள முகாம்களிலேயே, அவர்களைப் பரீட்சைக்குத் தயார் செய்வதற்கான விசேட வகுப்புக்கள் நடத்தப்பட்டதாகவும், அந்தந்த முகாம்களிலேயே அவர்கள் பரீட்சை எழுதுவதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும் திருமதி வீ. ஆர் ஏ. ஒஸ்வெல்ட் தெரிவித்துள்ளார்.

அவர்களுக்குத் தேவையான அப்பியாசப் புத்தகங்கள், எழுது கருவிகள் என்பனவும் வழங்கப்பட்டதுடன், பரீட்சை எழுதுவதற்குத் தேவையான அனைத்து பொருட்களும் வழங்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றவுள்ள முகாம்கள் ஒன்றிரண்டைத் தவிர ஏனைய இடங்களில் இவர்களுக்குத் தேவையான தளபாட வசதிகள் இல்லாததனால், இந்த மாணவர்கள் நிலத்தில் இருந்தே பரீட்சை எழுத வேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தகைய மாணவர்களுக்குப் பரீட்சை எழுதுவதற்கு வசதியாக 'காட்போர்ட்' துண்டுகள் வழங்கப்பட்டுள்ளதாக வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். ஒழுங்கு செய்யப்பட்டுள்ள கூடாரங்களில் மழை ஒழுக்கு அல்லது நிலத்தில் ஈரம் காணப்பட்டால், பாதிப்பின்றி மாணவர்கள் பரீட்சை எழுதுவதற்கு அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள 'காட்போர்ட்' உதவியாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ- 6)

# வடக்கின் தற்காலிக இராணுவ முகாம்கள் நிரந்தர முகாம்களாக மாற்றப்படும்

## அரசு அறிவிப்பு

(கொழும்பு)

வடக்கு பகுதியில் தற்போது அமைக்கப்பட்டுள்ள தற்காலிக இராணுவ முகாம்கள் அனைத்தும் நிரந்தர முகாம்களாக மாற்றப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

வடக்கில் உள்ள இராணுவ முகாம்களை அகற்றுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுத்த கோரிக்கையை நிராகரித்துள்ள அரசாங்கம், வடக்கில் தற்போதுள்ள முகாம்கள் அங்கு நிரந்தர முகாம்களாக மாற்றுவதற்கான திட்டங்களை மேற்கொண்டு வருகிறது.

இந்த முகாம்களில் உலங்கு வானூர்திகளை நிறுத்தக் கூடிய வசதிகளும் செய்யப் படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எந்தவொரு காரணத்திற்காகவும் வடக்கின் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறைக்கப்பட மாட்டாதென கூட்டுப்படைகளின் பிரதான பாதுகாப்பு அதிகாரி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

வடக்கின் இராணுவப் படையின் பலத்தை அதிகரிக்கும் நோக்கில் மேலதிக துருப்புக்கள் சேர்க்கப்பட உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஒ-6)

## இலங்கை அதிபர் சேவை தரம் I இற்கு ஆயிரத்து 500 பேருக்கு பதவி உயர்வு

### கல்வி அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை அதிபர் சேவை தரம் 2-1 இலிருந்து ஆயிரத்து 500 பேர் முதலாம் தர அதிபர்களாகப் பதவி உயர்வு பெற்றுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

10 வருடங்களின் அதிபர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்படுவதாக இதுதொடர்பாக தகவல் வெளியிட்டுள்ள கல்வி அமைச்ச அதிகாரி ஒருவர் நாடெங்கிலும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்த அதிபர் சேவை 2-1 ஐச் சேர்ந்த ஆறாயிரம் பேரில் இருந்தே குறிப்பிட்ட 1500பேரும் தெரிவாகி இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்களை எதிர்வரும் 30ஆம் திகதி கொழும்பு டி.எஸ்.சேனநாயக்க வித்தியாலயத்தில் நடை பெற விருக்கும் வைபவத்தின் போது கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த வழங்கவிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-5)

## வீதி புனரமைக்க கோரிக்கை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை முகாம் வீதியிலிருந்து புனித யாகப்பர் ஆலயம் செல்லும் முதலாவது குறுக்கு வீதி குன்றும் குழியுமாக காட்சியளிக்கின்றது. கடந்த பலவருடங்களாக பயணிகள் செல்ல முடியாது பள்ளங்கள் ஏற்பட்டும் கல்லுகள் இன்றியும் காணப்படும் இவ் வீதியை புனரமைப்பு செய்து தருமாறு வீதி அபிவிருத்தி சபையபயணிகள் கேட்டுள்ளனர். (ஓ-72)

# வன்னி மக்களின் துயரமும் சர்வதேசத்தின் மௌனமும்


வன்னியில் நடந்த உச்சக் கட்டப் போரில் தங்களின் குடும்பம், இல்லம் , செந்தங்கள், சொத்துக்கள், நிலம்,தொழில் என்று அனைத்தையும் இழந்து எந்த வன்னி மண்ணில் ஓராண்டுக்கு முன்னர் வரை வளமாக வாழ்ந்தனரோ அதே பூமியில் இன்று முகாம்களில் அடைபட்டுக் கிடக்கும் ஈழத் தமிழர்கள் அனுபவித்துவரும் கொடுமைகள் எங்கே அவர்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக அழிந்து விடுவரோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இறுதிப் போரில் உயிரிழந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் போக குண்டடிபட்டு கை கால் இழந்து மருத்துவ சிகிச்சை ஏதுமின்றி இராணுவத்திடம் சிக்கிய 3 இலட்சம் மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ள 33 முகாம்களில் கடந்த வாரத்தில் பெய்த அடை மழையால் ஏற்பட்ட வெள்ளம் அவர்களைப் பெரும் அவதிக்கு ஆளாக்கியுள்ளது.

எங்கு பார்த்தாலும் தண்ணீர் தேங்கிக்கிடக்கிறது. பல இடங்களில் இடுப்பளவிற்கு நீர் பெருக்கு எங்கும் தண்ணீர் சூழ்ந்ததால் அங்கு பூமியில் குழி வெட்டி ஏற்படுத்தப்பட்ட கழிவுக்குழிகள் சிதைந்து அதில் தேங்கியிருந்த கழிவுகள் வெள்ள நீருடன் கலந்து சுற்றுச் சூழலை கெடுத்துள்ளது.

சமைப்பதற்கு வழங்கப்பட்ட் விறகுகள் மழையில் நனைந்து ஈரமானதால் வழங்கப்பட்ட குறைந்தளவு உணவுப் பொருட்களையேனும் சமைத்து உண்ண வழி இல்லை. மழையால் அந்தச் செம் மண் பூமி சேறானதால் அந்தப் பகுதிக்கு வாகனங்களில் வரும் தூய குடி நீர் கூட கிடைக்காமல் முகாம்களில் உள்ள அம் மக்கள் நரக வேதனையில் தள்ளப்பட்டுள்ளார்கள். என்று வந்த வந்து கொண்டிருக்கும் செய்திகள் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

இப்படிப்பட்ட நிலை ஏற்படும் என்றும் வட கிழக்கு பருவமழை





பொழியும் காலத்தில் தாழ்வான பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இந்த முகாம்களில் வெள்ள நீர் தேங்கும் நிலை ஏற்படும் என்றும் அதன் காரணமாக ஏற்கனவே மோசமான சுகாதார சூழல் உள்ள அப் பகுதியில் தொற்று நோய் பரவும் அபாயம் `ஏற்படும் என்றும் அந்த முகாம்களுக்குச் சென்று வந்தவர்கள் அபாய எச்சரிக்கை விடுத்தனர்.

பாதுகாப்பு வலயப் பகுதியில் தஞ்சமடைந்துள்ள 3அரை இலட்சம் மக்களைக் காப்பாற்றுங்கள் என்று உலக நாடுகளுக்கு புலம்பெயர்ந்த தமிழர்களும் மனித உரிமை அமைப்புக்களும் அபாய அறிவிப்பை செய்து போரை நிறுத்தி மக்களைக் காக்க எந்த நடவடிக்கைகளும் உலக நாடுகளும் ஐ.நா.வும் எடுக்காததால் இறுதிக்கட்டப் போரில் 50 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டனர்.

இந்த நிலையில் மிக கொடுமையான சூழலில் போதுமான அடிப்படைத் தேவைகளும் வசதிகளும் இல்லாத முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் மக்களை இயற்கையால் ஏற்படும் அந்த ஆபத்தில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்று மனித உரிமை கருத்தரங்குகளில் பேசப்பட்டும் அதற்கான முயற்சிகளும் எடுக்கப்பட்ட சூழலில் சற்றும் எதிர்பாராத வகையில் திடீர் என்று மழை பெய்து அவர்களின் துயரத்தை பன்மடங்காக்கியுள்ளது.

## திசை திரும்பும் அரசு

போர் முடிந்து விட்டது. விடுதலைப்புலிகளை முற்றிலுமாக அழித்துவிட்டோம் இதற்கு மேல் அவர்களால் துளிர் விட முடியாது என்று கொழும்பில் இருந்து கொண்டு வீர வசனம் பேசும் இலங்கை அரச தலைவர்கள் முகாம்களில் அடைக்கப்பட்ட மக்களுக்கு தேவையான எந்த வசதியையும் ஏற்படுத்திக்கொடுக்கவில்லை. அதற்கான நிதிப்பலமும் அரசிற்கு இல்லை.

முகாமில் உள்ள மக்களை ஒப்படைக்காத நிலையிலும் அவர்களுக்குத் தேவையான இருப்பிட வசதிகளை (கூடாரங்கள் ,சமையல் பாத்திரங்கள் போன்றவற்றை ) ஐ.நா.வின் அகதிகள் அமைப்பு தான் வழங்கி வருகிறது.

இந்த மூன்று இலட்சம் மக்களுக்கும் தேவையான உணவு ஐ.நா.வின் உலக உணவுத்திட்டத்தின் கீழ் தான் வழங்கப்படுகின்றது.

ஆனால் அவர்களை நேரடியாக அம் மக்களிடம் விநியோகிக்க அனுமதிக்காமல் இலங்கை இராணுவமே பெற்றுக் கொண்டு விநியோகித்து வருகிறது. ஐ.நா.வின் இந்த திட்டத்திற்கும் போதுமான நிதி உலக நாடுகள் இடமிருந்து வராததால் தங்கள் திட்டத்தின் கீழ் வழங்கி வரும் உணவு அளவை பாதியாகக் குறைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்று இவ் அமைப்பு கூறியுள்ளது.

உண்மை இவ்வாறு இருக்க மழையினால் முகாம்களில் உள்ள மக்களுக்கு ஏற்பட்டுள்ள அவதிகளுக்கு ஐ.நா.தான் காரணம் என்று கூசாமல் கூறியுள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தமிழர்கள் எங்கள் மக்கள் அவர்களை எப்படிப் பாதுகாப்பது என்று எங்களுக்குத் தெரியும்.

இப்போதே அவர்கள் வாழ்ந்த இடங்களில் குடியமர்த்த முற்பட்டால் அங்கு புதைத்து வைக்கப்பட்டிருக்கும் கண்ணிவெடிகளில் சிக்கி அவர்கள் உயிரிழக்க நேர்ந்தால் யார் பொறுப்பு ? நாங்களல்லவா என்று கருணைக் கடலாக பேட்டி அளித்துவிட்டு அவர்களை காப்பற்ற முடியாமல் எல்லாவற்றையும் ஐ.நா. தான் செய்கிறது. ஆனால் வெட்கம், கருணை, மனிதாபிமானம் என்பதெல்லாம் இந்த பௌத்த - சிங்கள இனவாதிகளிடம் தேடினால் எங்கிருந்து கிடைக்கும்.

மூன்று இலட்சம் மக்களுக்கு ஒரு வேளை உணவு மட்டுமே கொடுத்துவிட்டு குடிக்க தண்ணீர் பெறவும் கழிவறைக்குச் செல்வதற்காகவும் அவர்களை நாள் முழுவதும் வரிசையில் நிற்க வைத்து நாளும் அலைக் கழித்து வரும் அவர் கூறுகிறார் அவர்களிடையே பதுங்கியுள்ள புலிகளைத் தேடுகிறோம். எல்லா புலிகளையும் தேடி கண்டு பிடிக்கும் வரை மீள் குடியமர்த்த முடியாது. அவர்களை இப்போதே வெளியில் விட்டால் வன்னிக் காடுகளில் புதைத்து வைத்துள்ள ஆயுதங்களை எடுத்து மீண்டும் போரைத் துவக்கி விடுவார்கள் என்கிறார்.

விடுதலைப் புலிகளே இல்லை. எல்லோரையும் ஒழித்து விட்டோம் புலிகளின் பிடியில் இருந்து தமிழர்களை மீட்டு விட்டோம் என்று படைத்தளபதி சரத்பொன்சேகவும் நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் வீராவேசத்தோடு முழங்கினார்களே? இப்போது மீண்டும் புலிகளைத் தேடுவது எதற்கு?

கோத்தபாய கூறியதில் இருந்து ஒரு உண்மை வெளி வந்துள்ளது. முகாம்களில் அடைக்கப்பட்டுள்ள மக்களில் இருந்து பல ஆயிரக்கணக்கான (24,000 பேர் என்று கூறுவார்கள்) இளம் வயதினரை தனியாகப் பிரித்து அவர்களை புலிகள் என்று முத்திரையிட்டு சித்திரவதை செய்து வருகிறார்கள் அந்தப் பகுதிக்கு யாரையும் நுழைய விடாமல் பலத்த பாதுகாப்பு போட்டுள்ளது இலங்கை இராணுவம்.

இவர்கள் மட்டுமின்றி மேலும் மூவாயிரம் இளம் பெண்களை அவர்களின் குடும்பத்தாரிடம் இருந்து பிரித்து கூட்டிச்சென்றுள்ளனர். அவர்களின் கதி என்ன என்பது இன்று வரை தெரியவில்லை என்றும் தகவல்கள் கூறுகின்றன.

இரண்டாம் உலகப் போரின் போது ஜேர்மனியின் நாயி முகாம்களில் நடத்தப்பட்டதை வரலாறு படித்தவர்கள் அறிந்திருப்பார்கள். அதையே இன்று ஈழத் தமிழர்கள் மீது செயல் படுத்துகிறது இலங்கை அரசு.

இதையெல்லாம் இந்தியாவும் சீனாவும் பாகிஸ்தானும் ஏற்றுக் கொள்ளலாம். ஏனென்றால் இந்த மூன்று நாடுகளுமே தமிழினப்படுகொலைக்கு எல்லாவிதத்திலும் உதவின. ஆனால் மற்ற உலக நாடுகள் ஏன் மௌனம் சாதிக்கின்றன என்பதுதான் புரியவில்லை.

இறுதிக் கட்டப் போரில் பல்லாயிரக் கணக்கான அப்பாவி மக்களை படுகொலை செய்ததை அறிந்து அதிர்ச்சியுற்ற உலகநாடுகள் அதற்காக பன்னாட்டு விசாரணை நடத்த வேண்டும் என்று கோரிய உலக நாடுகள் இன்று முகாம்களில் 3 இலட்சம் மக்களை முட்கம்பி வேலிக்குள் சிறைப்படுத்தியிருப்பதை ஏன் கண்டும் காணாமல் இருக்கின்றன.

போர் முடிந்து விட்டது என்று அறிவித்த பின்னரும் அப் பகுதிக்கு பத்திரிகையாளர் களையும் மற்ற ஊடகங்களையும் அனுமதிக்காததை அம்னெஸ்டி மட்டுமே கண்டிக்கிறதே. ஐ.நா ஏன் வாய் திறக்கவில்லை? அந்த மக்கள் அனுபவித்து வரும் கொடுமைகளை ஏன் ஐ.நா பாதுகாப்பு பேரவை விவாதிக்கவில்லை?

இது மிக ஆபத்தான மௌனம். இந்த மௌனம் இன்னும் சில மாதங்களுக்கு தொடர்ந்தால் இந்த மூன்று இலட்சம் மக்களும் கொஞ்சம் கொஞ்சமாக அங்கு நிலவும் படுமோசமான சூழலால் ஏற்படப் போகும் தொற்று நோய்களாலும் அழிந்து போவார்கள்.

அப்படி ஒன்று நிகழுமானால் இந்த உலகில் ஐ.நாவும் (ஏற்கனவே அது கைப்பாவை என்ற அந்தஸ்துடன் தான் உள்ளது) அதன் மனித உரிமை அமைப்புக்களும் அதன் அமைவுக்கு அடிப்டையான தார்மீக நெறி முறைகளும் எந்த மரியாதையும் இன்றி போய்விடும்.

இறுதிக்கட்டப்போரில் கொல்லப்பட்டவர்களைக் கண்டு கொல்லாமல் விட்டது போல இன்று வரை உயிருடன் இருக்கும் இம் மக்களையாவது காத்து தங்கள் தார்மீக கடமை களை உலக நாடுகள் நிறை வேற்றட்டும். தமிழகத்தில் உள்ள தலைவர்களும் அங்கு சுமுக நிலை நிலவுகிறது என்று விபரம் தெரியாமல் பேசுவதை தவிர்த்து விட்டு மனிதாபிமான அடிப்டையாலாவது அவர்களை காப்பாற்றுமாறு குரல் கொடுக்கட்டும்.

தமிழகத்திலிருந்து தமிழன்

# அனர்த்தம் ஏற்படுத்தும் இன்னல் அவத்தைகள்

### இன்னல் அவத்தை ஒன்று

**ஆரம்பத்தில் (சில மணித்தியாலங்களில் இருந்து ஒரு மாதம் வரை)**

1.பதட்டம், பதகளிப்பு, பீதி இருக்கும் ஆரம்ப நிலையில் என்ன நடக்கின்றது என சிந்திப்பதற்கே நேரம் இருக்காது. உடனடி மாற்றம் பாதுகாப்புத் தேடி ஓடுவதாகும். பயமே பிரதான இயல்பாகக் காணப்படும்.

2.அதிர்ச்சி அல்லது விறைத்த நிலை ஏற்படுத்தும் அனர்த்த நிலையில் உண்மையை ஏற்றுக்கொள்ளும் தன்மை இல்லாது இருக்கும். பாதிக்கப்பட்டவர்கள் ஒன்றுமே நடைபெறாததுபோல் இருப்பர். விறைத்த நிலையில் காணப்படலாம் மாறாட்டமும் உணவில் விருப்பமின்மையும் காணப்படலாம்.

3.மன நிறைவு ,மன எழுச்சி, சந்தோஷம் மற்றவர்கள் இறந்தபோதும் தான் தப்பியது பற்றிச் சந்தோஷம் .

4. குற்ற உணர்வு மற்றவர்கள் இறந்த போது தான் தப்பியது .

5.குழப்பமடைந்து அலைதல் கண்ட பாட்டிற்கு கதைத்தல் என்ன நடந்ததென்று விளங்காது.

6. மீள சவம்பவங்கள் காட்சிக்கு வரல் கனவுகள் வரல் சிறிய சம்பவங்கள் இவற்றினை அதிகரிக்கச் செய்யலாம். இரவில் அதிகம் ஏற்படும். புனர்வாழ்வு வேலைகளில் ஈடுபடுவதால் இவற்றின் தாக்கம் குறைவாக அமையும்.

### இன்னல் அவத்தை இரண்டு

அனர்த்தம் ஏற்பட்டு ஒரு மாத்திதல் இருந்து ஆறு மாதங்கள் வரை எற்படக் கூடிய தாக்கங்கள்.

1. துன்பப்படல்

ஒருவரை இழந்திருந்தால் ஏற்படும் விளைவு. கவலை ,அடிக்கடி அழுதல், சாப்பாட்டில் விருப்ப மின்மை,நித்திரை இன்மை, சாக விருப்பம் எனக் கூறல்,வேலைகளில் நாட்டமின்மை,இழந்ததை எண்ணிக் கொண்டிருத்தல் என்பன காணப்படும்.

2. உள்ளத்தாக்கத்திற்குப் பின்பான மனவடு

✸ நோயின் ஆரம்ப அறிகுறிகள் காணப்படும்.

✸ அனர்த்தங்கள் பற்றிய நினைவுகள்/கன வுகள் வரல்

✸ அனர்த்ததினை நினைவுபடுத்தும் நிகழ்வு களைத் தவிர்த்தல்

✸ நித்திரைகொள்ள முடியாமை பதற்றமாக காணப்படல்

✸ பீதி எற்படல்

✸ பதகளிப்புக்கு உரிய அறிகுறிகளான அமைதியின்மை படபடப்பு வியர்த்தல் காணப்படலாம்.

✸ ஒன்றும் செய்ய இயலாத நிலை

✸ மாற்றங்களை சமாளிக்கமுடியாத நிலை

✸ வீட்டை விட்டு வெளியே வாழுதல் 40 50% பாதிக்கப்பட்டவர்கள் வீட்டில் வாழவிருப்பம் இன்மை

✸ உதாரணமாக ஒருவர் இறந்த பின் வேறு இடத்தில் வாழல்.

### இன்னல் அவத்தை மூன்று

**6 மாதங்களிற்கு பின்பான மாற்றங் கள்.**

✸ நாட்பட்ட துன்பத் தாக்கம். இயற்கையானது. ஒரு இழப்பிற்குப் பின் துன்பப்படலை ஏற்றுக்கொண்டு அதில் இருந்து குணமடைதலை விரைவு படுத்தல் அவசியமாகும் இழப்பின் பின் உடனடியாகக் கவலைப்படல் சாதாரண மானதாகும் தாங்க முடியாததாக அமையும் இது பல உணர்வுகளின் சேர்மானமாகும் . அதாவது இழப்பு பாது காப்பின்மை ஆதரவு இன்மை பயம் என்பவற்றினால் ஏற்படும் உணர்வுகளாகும் துன்பப்படும் போது ஒருவர் இதனை அனுபவிப்பார். இதன் காலமும் இதன் செறிவும் ஆளுக்கு ஆள் வேறுபடும் இரு வாரங்களாக இருக்கலாம் மாதங்களாக இருக்கலாம் வருடங்களாகவும் இருக்கலாம். ஆனால் காலத்துடன் இதன் வேதனை குறித்து கொண்டு வரும் ஒருவர் துன்பப்படும் போது அவரது உனர்வுகளுடன் செயற்படா விடின் துன்பப்படும் காலம் நீடிப்பதுடன் வேதனையின் அளவும் அதிகமாக இருக்கும். எனவே துன்பத்தினை குறைக்கும் படிகளை அறிந்து வேதனை குறைய உதவுதல் வேண் டும்.

**துன்பப்படும் போது ஏற்படும் நிகழ் வுகள்.**

✸ கவலையாக இருத்தல்

✸ சௌகரியம் இன்மை

✸ இழந்ததை எண்ணிக்கொண்டு இருத்தல்

✸ குற்ற உணர்வு

✸ நித்திரை இன்மை

✸ உணவில் விருப்பம் இன்மை

✸ சினத்தல்

✸ தற்கொலை செய்யும் முயற்சி

✸ இழப்பினை ஞாபகப்படுத்தும் போது குழப்பமடைதல்

**மாறான செயல்கள்**

✸ வலிப்பு உடல் அசைவுகள் குறித்த நபர்களை சந்திக்கும் போது குறித்த இடத்திற்கு செல்லும் போது

✸ நிறைவேறாத ஆசைகள் நிறைவேறுவதற்காக

✸ உளத்தாக்கத்திற்கு பின்பான மனவடு

✸ மனச்சோர்வு

✸ பாரிய இழப்பு உணரப்படல்

✸ மனம் மாற்றமடைதல்

✸ தனிமையில் இருக்க விருப்பம்

✸ நித்திரை உணவு என்பன பாதிப்பு

✸ சக்தி இன்மை கிரகிக்க முடியாது இருந்து அழுதல்

✸ தனிமைப்படுத்தப்படல் தம்மைத் தாமே குறைத்துக்கொள்ளல் என்பன காணப்படும்.

அதிர்ச்சியும் மறுப்பும் இல்லாதுபோக கவலையும் நம்பிக்கை இன்மையும் வந்து சேரும் இதனால் சாதாரன அன்றாட வேலைக ளையே செய்ய முடியாது இருப்பர். அடிக்கடி அழு வர். ஆண்கள் மனச்சோர்வு அடைந்தாலும் அதிகம் அழுவதில்லை.

**துன்ப அவத்தை நான்கு நாட்பட்ட விளைவுகள்.**

**மீளக் கட்டியெழுப்பும் போது**

1. முயற்சி குறைதல் வேலை செய்யாது இருத்தல்
2. போதைப் பொருள் பாவனை அதிகரித்தல்
3. தற்கொலைகள்
4. மெய்ப்பாட்டு நோய்கள்
5. திருமணப்பிணக்கு
6. குடும்பத்தினை கொண்டு நடத்தல் கடினமாக இருத்தல்.
7. முறையற்ற பாலியல் உறவுகள்.

குடும்பத்தில் ஏனைய ஆண்களால் ஆண் உறவுகளை இழந்தவர்கள் இலகுவில் பாதிக்கப்படுவர். இவை எல்லாம் அசாதாரண சூழலில் நிக ழும் சாதாரண நிகழ்வுகளே. இவை வன் முறை யை எதிர் கொண்டவர்களில் காணப்படும். வெற் வேறான அனர்த்தத்தின் பின் வேறுபட்ட அவத்தைகளில் நிகழும். எனவே, புனர் வாழ் வும் மீளக்கட்டி எழுப் புதலும் நீண்ட நாட்களுக் குரியவை. அனர்த்தத்திற்கு பின்பான உணர்வு மாற்றங்கள் காலத்துடன் வேறுபடும். ஆளுக்கு ஆள் வேறுபடும்.

**டாக்டர் சி. யமுனாநந்தா**

# புலிகள் பயன்படுத்திய ஆயுதவிபரங்களை வெளியிடுமாறு சர்வதேச நாடுகள் கோரிக்கை

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்களால் பயன்படுத்தப் பட்ட ஆயுத உபகரணங்கள் தொடர்பான தகவல்களை வெளியிடுமாறு அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் உத்தியோகபூர்வ மாக கோரிக்கை விடுத்துள்ளன என்று இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய தெரித்துள்ளார்.

இந் நிலையில், பாதுபாப்புத் தரப்பினரால் வடக்கிலிருந்து மீட்கப்பட்ட ஆயுதங்கள் அனைத்தும் இராணுவத்தி[illegible] ஆவாது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு ஒக்[illegible]பர் மாதம் 3 ஆம் திகதி ஏற்[illegible] செய்யப்பட்டுள்ள கண்காட்சியில் [illegible]சிப்படுத்தப்படவுள்ளன என்று அவர் கூறினார்.

இராணுவத் தளபதியாக புதிதாக பதவியேற்றுள்ள லெப்டினன்ட் ஜெனரல் ஜெகத் ஜெய சூரியவை வரவேற்கும் நிகழ்வொன்று தம்புளை கெக்கிராவையில் அமைந்துள்ள படைத் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இராணுவத் தளபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு இராணுவத்தினர் தமது பூரண ஆதரவினை வழங்கி வருகின்றனர். இதற்கமைய ஏ-35, ஏ- 34 மற்றும் ஏ- 9 வீதிகளை இராணுவத்தின் பொறியியல் பிரிவினர் புனரமைத்து வருகின்றனர்.

அத்துடன் கட்டடங்களைப் புனரமைக்கும் பணிகளுக்கு மேலும் இராணுவ அணிகள் ஈடுபடுத்தப்படவுள்ளன.

இதேவேளை பாதுகாப்பு தரப்பினரால் கைது செய்யப்பட்டுள்ள விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வளிக்கப்படும் நடவடிக்கைகள் தற்போது பாதுகாப்பு தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அத்துடன் வடக்கில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக நலன்புரி முகாம்களில் மறைந்து வாழும் புலி உறுப்பினர்களை இனம் கண்டு கைது செய்யும் நடவடிக்கை ஒன்றும் தற்போது பாதுகாப்பு தரப்பினரால் மேற்கொண்டு வருகின்றது.

அதனால் நலன்புரி கிராமங்க ளின் பாகாப்பு இராணுவத்தினால் பலப்படுத் தப்பட்டுள்ளது. இது தவிர்ந்த அங்குள்ள மக் களின் நலன்புரி விடயங்கள் தொடர்பில் புனர்வாழ்வு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. (ஓ- 6)

# இடம் பெயர்ந்தவர்களின் இன்றையநிலை தொடர்ந்தால் தென்னிலங்கையில் போராட்டம்

## இடது சாரி முன்னணி தெரிவிப்பு

(கொழும்பு)

இடம் பெயர்ந்து அகதி முகாம்களிலுள்ள மக்களை அவர்களுடைய சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தும் எந்த திட்டமும் அரசாங்கத்திடம் இல்லை. இம் மக்களைக் கட்டி பணம் பெறவே அராசங்கம் முயற்சிக்கின்றது. இந்த நிலைமை தொடருமானால் மக்களை ஒன்று திரட்டி தென்னிலங்கையில் பாரிய போரட்டங்களை முன்னெடுப்போம் என்று இடதுசாரி முன்னணி தெரிவித்துள்ளது.

இவ்வாறு முகாம்களில் அடைத்து வைத்துள்ள மக்களை அவர்களுடைய சொந்த இடங்களில் மீள் குடியமர்த்தக்கோரி நாம் முன்னெடுக்கவுள்ள போரட்டத்திற்கு நிச்சயமாக தென் னிலங்கை மக்கள் ஆதரவு தருவார்கள் குழு உறுப்பினர் நடராசா ஜனகன் தெரிவித் தார்.

இடது சாரி முன்னணியின் அலுவலகத்தில் இடம் பெயர்ந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில் முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ள மக்கள் பல்வேறு இன்னல்களை சந்திப்பதாக எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இதில் அனேகமான முறைப்பாடுகள் காணாமல் போனவர்கள் தொடர்பான முறைப்பாடு களாகும். யுத்தத்தின் போது அரச கட்டுப் பாட்டுப்பகுதிக்கு வந்த பின்னரே இவர்கள் காணாமல் போயுள்ளதா அம் முறைப்பாடு களில் குறிப்பிடப்படடுள்ளது. ஒரு குடும்பத்தில் 9 பேர் இருந்துள்ளனர். இதில் மனைவி செல் வீச்சினால் இறந்துள்ளார். இவரின் உடலை அடக்கம் செய்து விட்டு மிகுதி எட்டுப் பேரையும் இராணுவத்தினர் பஸ்களில் ஏற்றி முகாம்களுக்கு கொண்டு சென்றுள்ளனர். இவர்களில் ஏழு பேர் தற்போது காணாமல் போயுள்ளனர். இதில் ஒரு வயது குழந்தையும் அடங்குவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு இம் மக்கள் பல்வேறு அசௌகரியகங்களை எதிர் நோக்கிவருகின்றார்கள். தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக முகாம்களுக்குள் வெள்ளம் நிரம்பியுள்ளது. இவ்வாறான காலநிலை மாற்றத்தால் அங்கு தொற்றுநோய்கள் ஏற்படும் அபாயம் காண ப்படுகின்றது எனவும் அவர் தெரிவித்தார். (ஓ-6)

# 44 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு விழாவும்

(சாவகச்சேரி)

மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலையத்தின் 44 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் வளர்மதிக்கல்விக் கழக பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மட்டுவில் வளர்மதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

நிலையத் தலைவர் சி. பகீஷன் தலைமையில் நடைபெறும் மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரதேசசெயலாளர் செ. சீனிவாசன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

புலமைப் பரிசில் கடந்த வருடம் 5 ஆம் ஆண்டு பரீட்சை மற்றும் க. பொ.த சாதாரணப் பரீட்சை ஆகிய வற்றில் சித்திபெற்ற கல்விக் கழக மாணவர்களுக்கும் தரம் 1 இலிருந்து 11 வரையான மாணவர்களிற்கு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர் களுக்கு பரிசில்கள் வழங்க்ப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-29)

# வினா விடைப் போட்டிகளுக்கான விண்ணப்பம் கோரல்

(வடமராட்சி)

வடமராட்சி கல்வி வலயத்தால் பாடசாலை மாணவர்களுக்கிடையில் சமூக விஞ்ஞானம், தொழிநுட்பம், சங்கீத பாடங்களுக்கான வினா விடைப் போட்டிகள் நடத்தப்படவுள்ளது.

இப்போட்டிகள் செப்டெம்பர் மாதம் 26 ஆம் திகதி வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கான விண்ணப்பங்களை ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியாக இரு பிரதிகளில் ஆங்கிலத்தில் செப்டெம்பர் மாதம்15 ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்வி அலுவலகத்தின் கல்வி முகாமைத்துவ பிரிவில் ஒப்படைக்குமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா பாடசாலை அதிபர்களை கேட்டுக் கொள்கின்றார்.

வலயமட்டப்போட்டியில்வகுப்புரீதியாகவெற்றியீட்டிய முதல் மூன்று மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு சான்றிதழ்களுடன் பரிசில்களும் வழங்கப்படவுள்ளது. (ஓ-6)

திரை விமர்சனம்

# வண்ணத்துப் பூச்சி




நட்சத்திரங்கள், ஸ்ரீலட்சுமி (அறிமுகம்) சித்தார்த், மாதவி ஷர்மா பாலாசிங் ரேவதி மற்றும் பலர் கதை திரைக்கதைவசனக்இயக்கம் சி.அழகப்பன்

தாத்தா பேத்தி இடையேயான உறவு தான் கதை.

நகரத்தில் வசிக்கும் சித்தார்த்தமாதவி ஷர்மா தம்பதிகளுக்கு ஸ்ரீலட்சுமிதான் வாரிசு பெற்றேர்கள் இருவரும் வேலைக்கு செல்கின்றனர். பணிப்பளுவின் காரணமாக தங்களின் குழந்தையின் மீது அன்பு செலுத்த தவறுகிறார்கள் இதனால் மனதளவில் பாதிக்கப்படும் சிறுமி ஸ்ரீலட்சுமி ஒரு விடுமுறையின் போது தன்னுடைய தாத்தா வீட்டிற்கு வருகிறாள் அங்கு அவளுக்கும் தாத்தாவிற்கும் இடையேயான பாசம் துளிர்த்து அதிகரிக்கிறது.

பெற்றோர்களை வெறுக்கிறாள் சிறுமி லட்சுமி விடுமைறை முடிந்தவுடன் அவளை அழைத்துச் செல்ல பெற்றேர்கள் வருகின்றனர்.

ஆனால் அவர்களுடன் செல்ல மறுக்கிறாள் தனுடைய வாரிசு மீது பாசத்தை யும் சென்டிமென்டையும் திணித்து தன்னிடமிருந்து பிரித்துவிட்டதாக பெற்றோர்கள் தத்தா மீதுகுற்றம் சுமத்துகிறார்கள் .

இந் நிலையில் சிறுமி நீதிமன்றத்திற்கு சென்று எம்முடைய விருப்பப்படி தாத்தா விடம் வளர என்னை அனுமதிக்க வேண்டும் என்றும் அறிவாளியாவதில் மட்டுமே குறியாக செயல்பட்டு என் மீது பாசத்தை செலுத்தாத் பெற்றோருடன் செல்ல எனக்கு விருப்ப மில்லை என்று கூறி வழக்குத் தொடுக்கிறாள் .

அத்துடன் என்னை என்னுடைய தாத்தாவிடமிருந்து பிரிக்க சதி செய்வதாக குற்றம் சுமத்துகிறாள்.

ஒரு சிறுமி பெற் றோரை விட்டு தாத்தாவிடம் வளருவதற்கு நீதி மன்றத்தின் ஆணையை எதிர்பார்ககிறார் இதனைத் தொடர்ந்து நீதி மன்றம் என்ன தீர்ப்பை வழங் கியது என்பதுதான் வண்ணத்துப்பூச்சியின் கதை.

என்ன விஷயத்தை சொல்ல வந்தாரோ அதற்கேற்ற திரைக்கதை அமைக்காததுதான் பெரிய குறை வீட்டை விட்டு ஓடிபோன குழந்தையின் தந்தை கதாபாத்திரம் நல்ல நிலையில் இருப்பதாக காட்டுவது முரண்பாடு சிறுமியாக நடித்திருக்கும் புதுமுக நடத்திரம் ஸ்ரீலட்சுமி நன்றாக நடித்திருக்கிறார் தாத்தாவாக நடித்திருக்கும் பாலாசிங்கம் நீதியரசராக வரும் ரேவதியும் தங்களுடைய பங்கை சரிவர செய்திருக்கிறார்கள்.

வண்ணத்துப்பூச்சி
நிறமிழந்தபூச்சி.

## கார்த்தியுடன் ஜோடி சேரும் காஜல்



பருத்திவீரன் கார்த்தியுடன் காஜல் அகர்வால் ஜோடி சேருகிறார். பருத்தி வீரனில் அறிமுகமாகி பட்டிதொட்டியெங்கும் ரசிகர் பட்டாளத்தை திரட்டிய கார்த்தி அடுத்து நடித்துள்ள ஆயிரத்தில் ஒருவன் ரீலிசுக்கு தயாராகி வருகிறது.

அதனைத்தொடர்ந்து லிங்குசாமியின் பையாவும் உற்சாகத்துடன் வளர்ந்து வருகிறான்.

சிறுத்தை படத்திலும் கார்த்தி ஒப்பந்தம் ஆகியிருக்கிறார்.

இந்நிலையில் வெண்ணிலா கபடி குழு பட இயக்குனர் சுசீந்திரன் இயக்கத்தில் நடிக்க கார்த்தி ஒப்பந்தமாகியிருக்கிறார்.

கல்பாத்தி அகோரம் தயாரிக்கும் இந்த புதிய படத்தில் கார்த்திக்கு ஜோடியாக காஜல் அகர்வால் நடிக்கவுள்ளார்.

## முருகதாஸ் இயக்கத்தில் சூர்யா





கஜினி என்ற மெகா ஹிட்படத்தை தமிழ் ரசிகர்களுக்குகொடுத்துவிட்டு இந்திதிரையுலக பக்கம் போன இயக்குநர் முருகதாஸ் மீண்டும் தமிழ் சினிமா பக்கம் வரப்போ கிறார். உதயநிதி ஸ்டா லினின் ரெட் ஜெயன்ட் மூவிஸ் சார்பில் தற் போது எடுக்கப்பட்டு வரும் ஆதவன் படத்தை தொடர்ந்து அந்நிறுவனம் தயாரிக் கப் போகும் புதிய படத்தைத்தான் முருகதாஸ் இயக்க விருக்கிறாராம்.

இன்னமும் பெயரிடப்படாத அந்த படத்திலும் சூர்யாதான் ஹீரோவாக நடிக்கிறார். ஹாரிஸ் ஜெயராஜ் இசையமைக்க உள்ளார். படத்தின் நாயகி மற்றும் நடிக்கர் நடிகர்கள் தொழில்நுட்ப கலைஞர்கள் தேர்வு நடந்து வருகிறது .

விரைவில் இப் படத்துக்கான அறிவிப்பு வெளிவரும்.

## கல்யாணம் பண்ணாமலே இருந்திருக்கலாம் -சோனியா விரக்தி



கல்யாணம் பண்ணாமலேயே இருந்திருக் கலாம் என்று சோ னியா அகர்வால் விரக்தியுடன் கூறி னார் செல்வராகவனுடம் நடந்த திருமண பந்தம் பாதியிலேயே முடிந்து விவாகரத்து வரை சென்றி ருப்பது குறித்து சோனியா அகர் வால் கூறுகை யில்,

நான் இப்போது முன்பை விட மன அமைதியாக இருக் கிறேன். என் தனிப்பட்ட விஷயங்கள் குறித்து யாரிடமும் பேச விரும்ப வில்லை. எல்லோ ருடைய வாழ்க்கை யிலும் பிரச்சினை கள் இருக்கும் என் வாழ்க்கையிலும் பிரச்சினைகள் வந்தன. பிரச்சினை களை பேசித் தீர்க்க முயன்றேன்.

அடுத்தடுத்து என்னுடைய முயற்சி தோல்வியில் முடிந்ததால் இப்படியொரு முடிவை இருவரும் சேர்ந்து எடுத்திருக்கிறோம் நான் செல்வாவை திருமணம் செய்தபோது என் வயது 24 எங்கள் திருமணத் துக்கு முதலில் என் பெற்றோர் சம் மதிக்க வில்லை. அவர்களுடன் போராடி சம்மதம் பெற்றேன் பாதியிலேயே திருமண வாழ்க்கை முறிகிறது. இந்த கல்யாணத்தை பண்ணாமலேயே இருந்திருக்காலம் என்றர்.

நடிகை சோனியா அகர்வால் தற்போது தீவிர உடற்பயிற்சியில் குதித்திருக்கிறார் மீண்டும் முழு வீச்சில் நடிக்கப் போவதாக சொல்லும் அவர் சினிமா வாய்ப்பு கேட்டு தனது திரையுலக நண்பர்களை தொடர்பு கொண்டு வருகிறாராம்.

## பொக்கிஷம்

ஓர் உண்மையான, உன்னதமான காதல் சம்பந்தப்பட்டவர் இறந்த பின்னும் வாழும், வாழ்விக்கப்படும் என்பதை சொல்ல வந்திருக்கும் படம்தான் பொக்கிஷம்.

கொல்கத்தா துறைமுகத்தில் அதிகாரியாக பணிபுரியும் சேரனுக்கும் நாகப்பட்டினம் நாகூரை சேர்ந்த இலக்கியம் படிக் கும் இஸ்லாமிய பெண் பத்மப்ரியா வுக்கும் இடையே சென்னையில் உள்ளமருத்துவமனையில் மல ரும் 1970 ஆம் வருடத்திய நட்பு பின் மெல்ல மெல்ல காதலாக கசிந்து உருவாகுவதும், யாதி மதம் கடந்து பின் அது கை கூடியதா? இல்லையா? என் பதுதான் பொக்கிஷம் படத்தின் மொத்தக் கதையும்! இதை எத்தனை வித்தியாசமாக செல்ல முடியுமோ ,அத்தனை வித்தியாசமாக சொல்லியிருக்கும் சேரன் விறு விறுப்பு காட்டாமல் வித்தியா சத்தை மட்டும் காட்டியிருப்பதும் படத்தின் பாதிநேரம் கடிதமாக எழுதி தள்ளுவதும் மவுத் ஓர் கண் வாசித்தபடி பயணமாக செய்வதும் சற்றே வருத் தம் சேரன் லெனின் எனும் பாத்திரத்தில் விஜ யகுமாரின் பொறுப்பான பிள்ளைகளில் ஒருவராகவும் பத்மப் பிரியாவின் காதலராகவும் அழகாக வித்தியாசம் காட்டி அசத்தலாக நடித்திருக்கிறார் சில இடங்களில் சிவாஜி காலத்து நடிப்பைதவிர்த்திருந் தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும்.



இலக்கியம் படிக்கும் இஸ்லாமிய பெண் நதீரா வாக பத்மப்பிரியா நாகூர் நதீராவாகவே வாழ்ந்திரு க்கிறார். உடம்பிலும் இன்னும் சற்றே முதுமையை காட்டியிருந்தால் பொருத் தமாக இருந்திருக்கும் எனினும் பத்மப்ரியா விற்கு விருதுகள் நிச்சயம். லெனின்... சேரனின் அப்பா தாமோதரனாக விஜய குமார் ,மகனாக மகேசாக ஆர்ஜன் ராஜேஸ் இந்த இருவரும் படத்தில் வரும் எண்ணற்ற பாத்தி ரங்களில் குறிப்பிட்டு செல்ல வேண்டியவர் கள். மொத்தத்தில் சேரனின் எழுத்திலும் இயக்கதித் திலும் நடிப்பிலும் பொக்கிஷம் கோபு ரத்தில் தூக்கி வைக்கும் வைக்கும் அல்ல... குப்பையில் தூக்கி போடும் மிச்சமும் அல்ல...! காத லித்தவர்கள் காதலிப்பவர்கள் மனத்தில் ஒட்டும் பாதரசம் ! பொக்கிஷம் சொட்டும் காதல் ரசம் ஒட்டும் பாதரசம்.



# ஆவணி மாதப் பலன்கள்

## துலாம்

**(சித்திரை 3, 4 பாதங்கள் , சுவாதி, விசாகம் 1,2,3 பாதங்கள் வரை)**

வசதியாக வாழ வேண்டுமென்ற எண்ணத்தை இளமையிலேயே வளர்த்துக் கொண்டிருக்கும் துலாம் ராசி நேயர்களே!

ஆவணி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது ராசி நாதன் சுக்ரன் தனாதிபதி செவ்வாயுடனும்,தொழில் ஸ்தானாதிபதி சந்திரனுடனும் இணைந்து ஒன்பதாமிடத்தில் சஞ்சரித்து மாதம் தொடங்குவது யோகம் தான். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். தொட்ட காரியங்களில் எல்லாம் வெற்றி கிடைக்கும். கனிவாகப் பேசி காற்றுள்ள போதே தூற்றிக கொள்வீர்கள். புனிதப் பயணங்கள் அதிகரிக்கும். புகழ்மிக்கவர்களின் சந்திப்பால் பொருளாதார விருத்தியைப் பெருக்கிக் கொள்வீர்கள்.

லாப ஸ்தானத்தில் விரயாதிபதியுடன், லாபாதிபதியும் இணைந்து சஞ்சரிப்பதால் விரயத்திற்கேற்ற இலாபம் வந்து கொண்டேயிருக்கும். எதை வாங்க வேண்டுமென்று நினைத்தீர்களோ அதை வாங்கி மகிழ்வீர்கள். வீட்டுக்குத் தேவையான பொருளாக இருந்தாலும் சரி, விலை உயர்ந்த பொருளாக இருந்தாலும் சரி, எதுவாக இருந்தாலும் நீங்கள் ஆசைப்பட்டதை வாங்கி மகிழும் நேரமிது. மின்சாதன பழுதுகள் அடிக்கடி உருவாகலாம். எனவே பழைய மின்சாதனங்களைக் கொடுத்து விட்டு புதிய மின்சாதனங்களை வாங்கி மகிழ்வீர்கள்.

குருவின் வக்ர இயக்கம் உங்களுக்கு நன்மையை வழங்கும், 3,6 – க்கு அதிபதியாக் விளங்கும் குரு வக்ர இயக்கத்தில் இருக்கும் பொழுது ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சிகளில்ஆதாயம் கிடைக்கும். பகைவர்கள் நண்பர்களாக மாறி உங்கள் பணிகளுக்கு உறுதுணை புரிவர். மகன் அல்லது மகளால் வந்த பிரச்சினை அகலும். ச்கோதரர்கள் உங்கள் உதவியை நாடி வருவர்.

குழந்தைகளின் முன்னேற்றத்தில் அதிக அக்கறை எடுத்துக் கொள்ளும் அமைப்பு உண்டு. அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். வீடு வாங்கும் வாய்ப்புகளோ, புதிய சொத்துக்கள் வாங்கும் சூழ்நிலையோ ஒரு சிலருக்கு ஏற்படலாம். குல தெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டினால், குடும்பத்தில் சுபிட்சம் மேலோங்கும்.

ஆகஸ்ட் 21 – ம் தேதி சுக்ரன் கடக ராசியில் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். சென்ற மாதத்தில் நடைபெறாத சில காரியங்கள் இப்பொழுது நடைபெறுவது கண்டு ஆச்சர்யப்படுவீர்கள். குடும்பத்தில் ஏற்பட்ட மனக் கசப்புகள் மாறும். வீடு வாகன பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். வேற்று இனத்தவர்கள் உங்கள் முயற்சிக்கு ஒத்துழைப்புச் செய்வர்.

கடக சுக்ரனை குரு பார்ப்பதால் உத் யோகத்தில் இருப்பவர்களுக்கு திடீரென இலாகா மாற்றங்கள் உருவாகலாம். இழப்புகளை ஈடு செய்யும் வாய்ப்பு கிட்டும். கூட்டாளிகளின் கருத்து வேறுபாடு காரணமாக, நன்றாக நடைபெற்ற தொழிலை நிறுத்தி விட்டோமே என்று அங்கலாய்த்தவர்கள் இனி ஆச்சர்யப்படும் விதத்தில் தொழில் தொடங்கும் வாய்ப்புகள் உருவாகும்.

செப்டம்பர் 16 – தேதி சிம்ம ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். ராசிநாதன் பதினொன்றில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் பயணங்கள் அதிகரிக்கும். வெளி மாநிலங்கள் முதல் வெளிநாடுகள் வரை செல்ல வேண்டு மென்று சிந்தித்தவர்களுக்கு நல்ல வாய்ப்புகள் வந்து சேரும்.

குடும்பத்திலிருந்து குழப்பங்கள் அக லும். குரு வழிபாட்டையும், சுக்கிர வழிபாட்டையும் வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் முறையாக செய்து வந்தால், அசுர குருவும், தேவ குருவும் உங்களுக்கு நல்ல பலன்களை அள்ளிக் கொடுப்பர்.

இம்மாதம் துயரங்கள துள்ளி ஓடவும், துணையாக நண்பர்கள் ஒத்துழைப்புச் செய்யவும் வைரவர் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள், வைரவரை வழிபட்டால் வளர்ச்சி கூடும்.

## விருச்சிகம்

(விசாகம் 4 –ம் பாதம், அனுஷம், கேட்டை வரை)

**கூப்பிட்டு பேசுபவர்களுக்கு .மத்தியில் கும்பிட்டுப் பேசும் வாய்ப்பைப் பெற்ற விருச்சிக ராசி நேயர்களே!**

ஆவணி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது ராசிநாதன் செவ்வாய், பனிரெண்டுக்கு அதிபதி சுக்ரனோடு இணைந்து எட்டாமிடத்தில் சஞ்சரிப்பதால் விபரீத ராஜயோகம் செயல்படப் போகிறது. எனவே, திட்டமிடாது செய்த காரியங்களல் கூட வெற்றி பெறுவீர்கள். செல்வ நிலை உயர்ந்து சேமிப்பு கூடும். ஆரோக்கியத்தில் அதிக அக்கறை எடுத்துக் கொள்வது நல்லது.

உற்சாகத்தையும், தின்னம்பிக்கையையும் உடன் பிறப்பாக கொண்ட நீங்கள் எண்ணங்களை எளிதில் செயலாக்க நண்பர்களை அரவணைத்துச் செல்வீர்கள். நாட்டுப்பற்று மிக்கவர்களின் ஒத்துழைப்போடு நல்ல காரியங்கள் பலவற்றிற்கும் பிள்ளையார் சுழி போடும் மாதமிது. தொழில் ஸ்தானத்தில் சூரியனும், புதனும் இணைந்து செயல்படுவதால் வருமானம் இரு மடங்காகும். வசதி வாய்ப்புகள் பெருகும். புதிய ஒப்பந்தங்கள் வந்து கொண்டேயிருக்கும். வங்கிச் சேமிப்பு உயரும்.

சென்ற மாதத்தில் நடைபெறாத சில காரியங்கள் இம்மாதத்தில் நடைபெறத் தொடங்கும். பிள்ளைகளின் வழியில் வந்த பிரச்சனைகள் அகலும். பிரபலமானவர்களாக விளங்கும் நீங்கள் பிரபலமானவர்களின் நட்பால் பல காரியங்களைச சாதித்துக கொள்வீர்கள். விரைவில் இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகும் சனியால் தொட்ட காரியங்கள் துளிர் விடப் போகிறது. வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேரப் போகிறது.

தனபஞ்சமாதிபதியான குரு வக்ரம் பெற்றிருப்பதால் குரு வழிபாட்டை முறையாக மேற்கொள்வது நல்லது. வழிபாட்டால் வளர்ச்சியைக் கூட்டிக் கொள்ளலாம் என்பது முன்னோர் வாக்கு. எனவே, அந்த வகையில் சுய ஜாதகத்தில் தெசாபுத்தி பலமறிந்து வழிபாட்டை மேற்கொண்டால் சுகங்களும், சந்தோஷங்களும் அதிகரிக்கும். துணையாக இருப்பவர்களும் தோள் கோடுத்து உதவுவர். தன வரவு தானாக வந்து சேரும். பெண் குழந்தைகளின சுபச் சடங்குகளும், திருமண நிகழ்ச்சிக்கும் முன்நின்று நடத்தி மகிழும் வாய்ப்பு கிட்டும்.

சுக்ர பலமும், குரு பார்வையும் கூடும் நேரத்தில் திருமணப் பேச்சுக்கள் தித்திக்கும் விதத்தில் முடிவடையும் அந்த அமைப்பு ஆகஸ்ட் 21 –ஆம் தேதிக்கு மேல் வருகின்றது. சுக்ரன் கடகத்தில் சஞ்சரிக்கும் அந்த நேரத்தில் குருவால் பார்க்கப்படுகிறார். குரு பார்க்க கோடி நன்மை அல்லவா? அதன் பார்வை 7,9,11 ஆகிய இடங்களில் பதிகிறது.

எனவே, விவாகப் பேச்சுக்களும் முடிவாகும். வீடு கட்டும் முயற்சியிலும் வெற்றி கிடைக்கும். கேது பலத்தால் ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். முன்னோர் வழிபாட்டிலும் குல தெய்வ வழிபாட்டிலும் ஆர்வம் காட்டினால் முன்னேற்றங்கள் வந்து சேரும்.

சிம்ம ராசியில் செப்டம்பர் 16 – ந் தேதி முதல் சக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். 7,12க்கு அதிபதியான சுக்ரன் சூரியன் புதனுடன் இணைந்து சஞ்சரிக்கும் பொழுது புத- ஆதித்ய யோகமும், புத – சுக்ர யோகமும் செயல்படப் போகிறது.

எனவே, பொருளாதார வசதி பெருகும். செல்வாக்கு உயரும். சொத்துக்களால் லாபம் கிட்டும். மாமன், மைத்துனர் வழி ஒத்துழைப்போடு மகத்தான காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு புதிய பொறுப்புகள் வந்து சேரும். அதிகாரிகளுக்கு தலைமைப் பதவி கிட்டும். திறமை பளிச்சிடும் இந்த நேரத்தில் திடீர் முன்னேற்றம் காண்பீர்கள்.

### சிவல்புரி சிங்காரம்

வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேர விநாயகப் பெருமானை வழிபட்டு வாருங்கள். ஆவணி சதுர்த்தியில் ஆனைமுகப் பெருமானை வழிபட்டால் அனைத்துக் காரியங்களிலும் வெற்றி கிடைக்கும்.

(தொடரும்)

# இடம்பெயர்ந்த மக்களை அழுத்தங்கள் காரணமாக மீள்குடியேற்றிவிட முடியாது

## அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன

இடம்பெயாந்துள்ள மக்களை எவரது அழுத்தங்கள் காரணமாகவும் உடனடியாக மீள்குடியேற்றிவிட முடியாது. அந்த மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

அதனைத் தட்டிக்கழிக்க அரசாங்கம் ஒருபோதும் தயாரில்லை என்று ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளாா.

மக்களின் சுதந்திர நடமாட்டம் என்றால் என்ன என்பதனை நாங்கள் உணர்கின்றோம். அதனை நாங்கள் மிதிக்கவில்லை மதிக்கின்றோம். ஆனால் நிவாரண கிராமங்களில் உள்ள மக்களுக்கு உடனடியாக சுதந்திர நடமாட்டத்துக்கான அனுமதியை வழங்க முடியாது என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளாா.

இடம்பெயர்ந்துள்ள மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் அமெரிக்க உயர்மட்டங்கள் தெரிவித்துள்ள விடயங்கள் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவ்விடயம் குறித்து அமைச்சர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில், இடம்பெயர்ந்துள்ள மக்களை விரைவாக மீள்குடியேற்றுவது அரசாங்கத்தின் பொறுப்பாகும். அந்த பொறுப்பை அரசாங்கம் ஒருபோதும் தட்டிக் கழிக்கவில்லை. எதிர்காலத்திலும் அவ்வாறு செய்யப் போவது மில்லை.

கடந்த நாட்களில் இயற்கை அனர்த்தம் காரணமாக சில பிரச்சினைகள் ஏற்பட்டன. அவற்றை எதிர்கொண்டு தற்போது ஏற்ற நடவடிக்கைகளை எடுத்த வருகின்றோம்.

ஆனால் யாரினதும் அழுத்தம் காரணமாக இடம்பெயர்ந்துள்ள மக்களை உடனடியாக மீள்குடியேற்றிவிட முடியாது. காரணாம் அந்த மக்களின்பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். எனவே மீட்கப்பட்ட பிரதேசங்களில் நிலக்கண்ணி வெடிகளை முற்றாக அகற்றிய பின்னரே மக்களை மீள்குடியேற்ற முடியும் என்றார். (6)

**APPLICATION FOR TRAINING OF PSYCHOLOGICAL COUNSELLORS**

The applications are called for training of counselors. This is a one year, week -end (Saturday & Sunday) course that consists of 450 hours. The applicants should have the following prerequisites to apply for this course.

1. Knowledge of English as to read, write and understand
2. A pass in Advanced Level
3. Age between 25 and 45 years
4. Interested in social Activities

The applicants will have to buy the special application form our office and submit them before the 6th of September. Only 25 applicants will be selected to follow this training.

**For further details please contact:**

"AHAVOLI"
INSTITUTE OF COUNSELLING PSYCHOLOGY
Affiliated to National University of Ireland, Galway
St. Patrick's Road, Jaffna.
Contact No: 021-222-2856

(C-3273)

# இந்தய கடலில் அத்துமீறி நுழைந்த இலங்கை மீனவர்கள் நால்வர் கைது

(தூத்துக்குடி)

தூத்துக்குடி அருகே இந்திய கடலில் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்த இலங்கை மீனவர்கள் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்திய கடலோரகாவல் படை கப்பல் வீராவில் கடந்த வியாழக்கிழமை மதியம் வீரர்கள் ரோந்து சென்றனர்.

தூத்துக்குடிக்கு கிழக்கே 40 கடல் மைல் தொலைவில் நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இலங்கை படகை சுற்றிவளைத்தனர். அதிலிருந்த இலங்கை மீனவர்களை பிடித்தனர். படகு, வலைகள், மீன்பிடி சாதனங்களையும் பறிமுதல் செய்தனர்.

இந்திய கடலில் அத்துமிறி நுழைந்த குற்றத்திற்காக கைது செய்யப்பட்ட அந்த நால்வரும், நேற்று முன்தினம் தூக்துக்குடி அழைத்துவரப்பட்டு தெர்மல்நகர் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டனர்.

இலங்கையிலிருந்து கடந்த 14 ஆம் திகதி தாங்கள் மீன்பிடிக்க புறப்பட்டதாகவும் காற்றின் திசை மற்றும் கடல் நீரோட்டம் காரணமாக படகு இந்திய கடலுக்கு வந்து விட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர். தொடர்ந்தும் விசாரணை நடந்து வருகிறது. (6)

**ENGLISH LANGUAGE DEVELOPMENT PROGRAMME**

★ A three - month English course for School leavers/ Job seekers
★ The Course content comprises the four skills in the English Language - Listening, Speaking, Reading & Writing
★ Evaluation & A ward of certificate at the end of the programme

Commencement : 7th September 2009
Lessons on Weekdays from 3.30 - 4.30 p.m.
Closing Date: 3rd September 2009

***English Language Teaching Unit***
***St. John's College Jaffna.***

(C-3141)

# ESOFT
## Computer Studies Pvt. (Ltd.)



### அருளாசிச் செய்தி

அன்புசார் பெருந்தகையீர்:

ESOFT COMPUTER STUDIES நிறுவனமானது வடமிழக்கு மக்களின் நன்மை கருதி வட யாழ் மாணவர்களுக்கு, யாழ் மாவட்டத்தில் இன்று கல்விப் பணியாற்ற முன்வந்திருப்பது மகிழ்ச்சி. நீண்ட காலமாக பல துன்பங்களைச் சுமந்து கொண்டிருக்கும் மக்களுக்கு கணினிக் கல்வி வரப்பிரசாதமாக அமைந்திருக்கின்றது. இன்று உலகளாவிய ரீதியில் கணினி கல்வி வளர்ச்சி அடைந்து காணப்பட்டாலும் யாழ்ப்பாண இளைய சமுதாயத்தினருக்கு கணினிக் கல்வியை வழங்க இந்நிறுவனம் முன்வந்திருப்பது அனைவருக்கும் மகிழ்ச்சி. இன்று இலங்கை நாட்டினதும் சர்வதேச நாட்டினதும் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது வரவேற்கத்தக்கதாகும். கொழும்பு பல்கலைக்கழகத்தில் BIT கற்பதில் முதல்வனாய் திகழ்கிறது. இது பல்வேறு சான்றிதழ்களையும் வழங்கியுள்ளது. யாழ்ப்பாண மாணவர்கள் கணினி கல்வியைப் பெறுவதற்கு வழிகாட்டியாக அமைகின்றது. இன்று ஆரம்பமாகும் இந்நிறுவனம் பல மாணவர்களை உருவாக்கி சிறந்ததொரு கல்வியை வழங்க இறைவனை வேண்டுகின்றோம். இப்பணியை செய்யும் அனைவரையும் இறைவன் ஆசீர்வதிப்பாராக!

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"
இரண்டாவது குருமஹா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகள்



### யாழ் ஆயரின் ஆசிச் செய்தி

ESOFT COMPUTER நிறுவனம் தனது சேவையை யாழ் மண்ணிலும் இன்று (23.08.2009) ஆரம்பிப்பதையிட்டு நாமும் மகிழ்ச்சி அடைகின்றோம். இந்நிறுவனம் பல இடங்களில் தனது சேவையை ஆற்றி நற்பெயரை, பெற்றதுடன் தகவல் தொழில் நுட்ப அறிவையும், கணினியின் பரிமாண வளர்ச்சிப் படிகளையும் இளம் சந்ததியினருக்கும், அனைவருக்கும் கொடுத்து அறிவை வளர்க்கின்றமை வரவேற்கத்தக்கது.

நீண்ட கால யுத்தத்தால் இத்தகைய தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியில் பின்தங்கிய நிலையில் இருந்த எம் யாழ் மண்ணிலும் இவர்களது சேவை ஆரம்பிக்கப்பட்டு எம் மாணவ, இளம் தலைமுறையினருக்கு நல் அறிவையும், வெற்றியையும் இத்துறைகளில் பெற்றுக் கொடுக்க முன்வந்துள்ள ESOFT நிறுவனத்துக்கும் அதன் அங்கத்தவர்களுக்கும் எம் ஆசியையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் நாமும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

மேதகு இ.தோமஸ் சவுந்தரநாயகம்
யாழ் ஆயர்
ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.
22.08.2009



### சமகால தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சிக்கான திறவுகோல்

ESOFT கணினிக் கற்கைநெறி நிறுவனத்தின் திறப்புவிழா நிகழ்விற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். 2009ஆம் ஆண்டினை தகவல் தொழிநுட்ப ஆண்டென அரசு பிரகடனப்படுத்தியமையைத் தொடர்ந்து அதன் வளர்ச்சி உத்தியோகப்பற்றுள்ள முறையிலும், உத்தியோகப்பற்ற வகையிலும் அபரிமிதமாக அமைந்திருப்பதைக் காண முடிகிறது. இதன் காரணமாக தகவல் தொழில்நுட்பத்தைக் கற்கும் ஆவல் மாணவர்களிடையே பெருக்கெடுத்து ஓடுவதை அவதானிக்க முடிகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த மூன்று தசாப்தங்களாக யுத்த சூழ்நிலை காணப்பட்டமையால் தகவல் தொழில்நுட்பத்தை இலகுவாகக்கற்கும் சாத்தியம் மாணவர்களிடையே காணப்படவில்லை. அதற்கு ஏற்றவாறு அவர்களைக் கற்பிக்கும் நிறுவனங்களும் மிகக்குறைவாகவே இப்பிரதேசத்தில் காணப்பட்டன. ஆனால் இன்று சர்வதேச, தேசிய, உள்ளூர் நிறுவனங்கள் பல இப்பிரதேசத்தில் கணினிக் கல்வியை மேம்படுத்த வருகை தந்துள்ளன. அவற்றில் புகழ்பூத்ததும் பெருமை மிக்கதுமான நிறுவனமாகத் திகழ்வதே ஈசொவ்ற் நிறுவனமாகும். அது தன் கிளையை யாழ் மாவட்டத்தில் நிறுவியது மட்டுமல்ல பட்டப் பின்படிப்புவரை தகவல் தொழில்நுட்பத்தைக் கற்பிக்க முன்வந்திருப்பது எமது மாணவர்களுக்கு வரப்பிரசாதமாகும்.

ஈசொவ்ற் ESOFT நிறுவனம் தரமான ஆசிரியர்களைக் கொண்டிருப்பது மட்டுமன்றி கணினி வளங்களையும் பெருமளவில் எடுத்துவந்து மாணவர்களுக்குத் தரமான கல்வியை வழங்க முன்வந்திருப்பது மகிழ்ச்சிக்குரியதே. இவர்களது முயற்சி சிறப்புடன் அமைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதுடன் யாழ்.குடாநாட்டு மாணவர்கள் ஈசொவ்ற் எனும் ஏணியில் ஏறி தமது வாழ்வின் உச்சத்தை அடைய வாழ்த்துகின்றேன்.

க.தேவராஜா
பதில் துணைவேந்தர்,
யாழ். பல்கலைக்கழகம்.



### Message from /Managing Director

It is truly a significant day today. The People of Jaffna are being given the opportunity to progress themselves along the same academic and professional pathways that are available to their brothers and sisters in the Southern part of this beautiful country.

ESOFT Computer Studies Private Limited is a well known entity that operates in several parts of Sri Lanka, and we are renowned for providing leading educational programmes including undergraduate courses such as the BIT Degree.

Gone are the days that Parents had to send their children out of their traditional homes, seeking better infrastructure for education. With organizations such as ESOFT opening branches in the North and the East, parents can safely tent to the educational needs of their children in the comfort of their own town and city.

With the dawn of peace in Sri Lanka, His Excellency the president, Mahinda Rajapaksa has initiated the 'Uthuru Wasanthaya" (Northern Spring) to develop the Province according to a home-grown strategy. Infrastructure development, electricity, water supply and sanitation, agriculture, irrigation, livestock development, inland fisheries, health, solid waste disposal, education, sports, cultural affairs and transportation are some of the areas that are being covered under this program. We at ESOFT are happy to participate in this effort in our own small way and look forward to a long and healthy relationship with the people of Jaffna.

Dr.Dayan Rajapakse,
Managing Directoı / CEO
ESOFT Computer Studies Private Limited



### ஆசியுரை

ESOFT கணினிக் கல்லூரியின் திறப்புவிழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். அரசாங்கம் '2009இல் ஆங்கில தகவல் தொழில்நுட்ப ஆண்டாகப் பிரகடனப்படுத்தியுள்ள வேளையில் இவ்வாறான ஒரு சிறந்த கணினி நிசாப்தம் தனது சேவையை யாழ்ப்பாணத்திற்கு விஸ்தரிப்பதை நான் மிகவும் வரவேற்கின்றேன். மேலும் கொழும்பு பல்கலைக்கழகத்தில் கூஷஐகூ பட்டப்படிப்பு, கூஷஊளு பட்டப்படிப்பு போன்ற பயிற்சி நெறிகளுக்கு இலங்கையின் சூடி1 நிறுவனமாகத் திகழும் இந்நிறுவனத்தின் வருகை யாழ் மாணவர்களுக்கு பெரிதும் பயன்பெறும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. இவர்களது சேவை மேன்மேலும் வரை எனது இதயப்பூர்வமான வாழ்த்துக்கள்.

சி.கந்தவேள்
பிராந்திய இணைப்பாளர்,
யாழ் பிராந்திய நிலையம்,
திறந்த பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.



### கற்றல் கற்பித்தலில் தகவல் தொழில்நுட்பத்தின் பங்கு

தகவல் தொழிநுட்பம் அபரிமிதமான வளர்ச்சியடைந்துள்ள போதிலும் நமது பிரதேசம் குறிப்பிடத்தக்க வளர்ச்சி பெற்றுள்ளது என்ற நிலை இல்லை என்றே கூற வேண்டும். நவீன கற்றல், கற்பித்தலில் தகவல் தொழில்நுட்பத்தின் பங்கு மிகக்காத்திரமானதாகும். இந்த நவீன முறைக் கற்றல் கற்பித்தலுக்காக சகல ஆசிரியர்கட்கும் தகவல் தொழில்நுட்ப அறிவு வழங்கப்பட வேண்டியது அவசியமாகும். இன்றைய நிலையில் சகல தொழிற்துறையினரும் தகவல் தொழில்நுட்ப அறிவைப் பெறவேண்டிய தேவையுள்ளது. இத்தகைய அறிவை வழங்குவதில் ESOFT நிறுவனத்தினரும் அளப்பரிய சேவையை வழங்க வேண்டும் எனக் கோருவதுடன் அவர்களின் பணி சிறக்க வாழ்த்துகின்றேன்.

திருமதி அ.வேதநாயகம்
வலயக் கல்விப் பணிப்பாளர்
யாழ்ப்பாணம்.

இலங்கை அரசாலும், சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட ISO 9001 - 2008 தரச் சான்றிதழ் பெற்ற கணனி நிறுவனம்

உங்கள் யாழ் மண்ணில் உதயமாகிறது


**23/08/2009**

ESOFT
The Leader in Professional ICT Education

ESOFT Computer Studies (Pvt) Ltd.
Committed to Systematic IT Education

www.esoft.lk

114, Navalar Road, Jaffna. T.P: 021 2224142





### வாழ்த்துச் செய்தி

காலம் அறிந்து, தேவைகளை உணர்ந்து, தரம் வாய்ந்த, சர்வதேச அங்கீகாரம் பெற்ற தனது அயராத சேவைகளின் மூலம் விடியலைத் தேடும் யாழ் மண்ணை விழித்தெழச் செய்ய வேண்டுமென்ற பேரவாவுடன் இன்று தடங்களைப் பதிக்கும் "ESOFT COMPUTER STUDIES" நிறுவனத்தினருக்கு எனது உள்ளத்தின் ஆழத்தில் இருந்து வாழ்த்துக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். தனது சேவையிலே வெற்றி கண்டு, சாதனை புரிந்து, சரித்திரம் படைத்திட வேண்டுமென்றும் வாழ்த்துகிறேன்.

திரு.ம.இக்னேசியஸ்,
அதிபர்,
பலாலி ஆசிரியர் கலாசாலை.



### Message

It gives me great pleasure in writing a message to ESOFT computer studies on the day of opening this enterprise in Jaffna. As the year 2009 is the year for ICT and English, a well equipped computer learning centre is necessary for our students. The opening of this new enterprise will definitely quench the thirst of our young learners.

I wish ESOFT computer studies centre to Extend their valuable service in Jaffna in the future.

Vigneswaran
Zonal Director of Education
Valikamam.



### வாழ்த்துச் செய்தி

யாழ். மண்ணில் தமது கணினிக் கற்கையை யாழ். மக்களுக்குப் புகுத்தும் நோக்கில் இன்று கால் பதித்தமையையிட்டு யாழ் மண்ணில் நானும் ஒருவராக சிறியவர் முதல் பெரியவர்வரையும் கணினி அறிவையூட்ட விளைகின்றது. இந்நிறுவனம். எம்மக்கள் அனைவரையும் இவ் உலகத்துடன் இணைக்க விளைவது சர்வதேசத்தையும் எம்மக்கள் கைக்குள் கொண்டுவரும் காங்கரியமே. அத்துடன் சர்வதேச தரம் மிக்க சான்றுகளை இந்நிறுவனம் வழங்குவதும் எம்மவர் எங்கு சென்றாலும் தொழில் பெற வாய்ப்பளிக்கும் வழிப்படுத்தலே.

அத்துடன் இந்நிறுவனம் வழங்கும் கற்கைநெறிச் சான்றுதல் மூலம் சர்வதேச கற்கை வாய்ப்புக்களை ஏற்படுத்துவதும் நல்நோக்கே. ESOFT நிறுவனம் எம்மாணவர்களுக்கு சிறந்த தலைவர்கள் என்ற ஏற்புடமையையும் இம்மண்ணில் நிறுத்த வேண்டும் எனவும் வேண்டிக் கொள்கின்றேன். ESOFT யாழ் மண்ணில் நிலைத்து மனங்களைத் தொட்டு வளர என் வாழ்த்துக்களும் ஆசீர்வாதங்களும் உரித்தாகட்டும்.

மனர் சின்னையா
அதிபர்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை.



### வாழ்த்துச் செய்தி

இன்றைய நவீன உலகிற் கணினி அறிவும், ஆங்கில அறிவும் மிகவும் அவசியமாக வேண்டப்படுகின்றது. இந்த இரண்டும் இருந்தாற்றான் தொழில் உலகில் புகவும், தொழில் பெற்றவர்கள் பிரகாசிக்கவும் முடியும். எனவேதான் எமது யாழ்ப்பாண மக்களும் கணினி அறிவைப் பெற்று நன்மை பெறவேண்டும் என்ற உயரிய நோக்குடன் ESOFT நிறுவனத்தினர் அதன் கிளையை இங்கே உருவாக்கியுள்ளனர். இதன்மூலம் மாணவர்களும், தொழில் புரிவோரும் நன்மை பெறவேண்டும். ESOFT என அவாவி நிற்கின்றேன். இன்று ஆரம்பமாகும் நிறுவனம் நீண்டகாலம் சிறப்புறச் சேவையை வழங்க வேண்டும் என மனதார வாழ்த்துவதிற் பெருமையடைகின்றேன்.

சைலேந்திரா
ESOFT
வடக்கு கிழக்கு இணைப்பாளர்.

**ESOFT** Computer Studies Pvt. (Ltd.)

114,
Navalar Road, Jaffna.
T.P: 021 222 4142

(சி/3146)

# குமரன் பத்மநாதன் கைதானது எப்படி?



விடுதலைப் புலிகளின் சர்வதேசத் தொடர்புகளால் குமரன் பத்மநாதன் (கே.பி) எவ்வாறு கைது செய்யப்பட்டார். எங்கு கொண்டு செல்லப்பட்டார் எனப் பல தகவல்கள் உலா வந்த வண்ணம் உள்ளன. கற்பனையின் உச்சக்கட்டத்திற்குச் சென்ற சில இணையத்தளங்கள், அவர் தானாகச் சென்று சரணடைந்தார் என்று கூட எழுதித் தள்ளியுள்ளன. உண்மை சற்று தாமதமாக வெளியே வருகின்றது கே.பியைப் பற்றி எந்த ஒரு இரகசியத்தையும் வெளியிடக் கூடாது என அரசின் முக்கியஸ்தர் ஒருவர் கொழும்பில் உள்ள அனைத்து பத்திரிகைளுக்கும் தனிப்பட்ட ரீதியில் கூறியுள்ளாராம். தற்போது கிடைக்கப்பெற்ற தகவலின் படி கொழும்பில் உள்ள ஒரு தனிப்பட்ட மிகவும் இரகசியமான இடம் ஒன்றில் கே.பி. வைக்கப்பட்டிருப்பதாகவும், தேசிய புலனாய்வுத் துறையின் இயக்குனர் கபில் கேண்டவிதாரன அவரிடம் விசாரணைகளை நடத்திவருவதாகவும் அறியப்படுகிறது.

கே.பி யிடம் கேட்கப்பட்ட கேள்விகள் அனைத்திற்கும் அவர் பதில் கூற மறுப்பதாகவும் அப்படிக் கூறினாலும், பொட்டு அம்மானுக்கே அது தெரியும் என்று கூறிவருவதால் விசாரணை நடத்துவோரால் பல விடயங்களைப் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது.

இருப்பினும் காலப்போக்கில் அவர் சில உண்மைகளைக் கக்குவார் அல்லது சித்திரவதைகளைத் தீவிரப்படுத்தும் நோக்கம் காணப்படுவதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இதுவரை அவர் கூறியதாக வெளிவந்த அனைத்துச் செய்திகளும் பொய்யான கற்பனையே என்கிறார்கள் அவரை விசாரிக்கும் புலனாய்வு அதிகாரிகள்.

கொழும்பில் உள்ள சில நாளிதழ்கள் வியாபார நோக்கத்திற்காக கே.பி சில விடயங்களைக் கூறியதாகச் செய்திகளை வெளியிட அவற்றை தமிழ் இணையங்களும் செய்தியாகப் பிரசுரித்துள்ளனவே அன்றி, இதுவரை அவர் வாயை திறக்கவில்லை என்பதே உண்மையாம்.

## இதுவரை வந்த தகவல்கள் அனைத்துமே தவறானதாம்

### எவ்வாறு கைது நடந்தது.

கே.பி. கைதானது இது ஒன்றும் முதல் தடவை அல்ல, தாய்லாந்தில் 2007 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 11 ஆம் திகதி கே.பி. கைதுசெய்யப்பட்டிருந்தார். இருப்பினும் தாய்லாந்து அரசாங்கம் அவரை நாடு கடத்தவில்லை. பின்னர் அவர் சில நாடுகளின் தலையீடு காரணமாக விடுவிக்கப்பட்டார்.

இருப்பினும் இம்முறை இலங்கை அரசு வித்தியாசமாக இதனைக் கையாண்டுள்ளது. கே.பியைக் கைது செய்ய முன்னர் வந்த தொலைபேசி அழைப்பு தயாமோகனிடம் இருந்து வந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதற்கு முன்னரும் ஒரு தொலைபேசி அழைப்பு வந்ததாகவும், இருப்பினும் அவர் அந்த தொலைபேசி அழைப்பை ஏற்றுக்கொள்ளவில்லை என்றும், பின்னர் வந்த தயாமோகனின் அழைப்பை ஏற்றுக் கதைத்த அவர், சைகையால் அங்கு நின்ற நடேசனின் தம்பியாரிடம் கொஞ்சம் பொறுங்கள் தான் வெளியே சென்று கதைத்துவிட்டு வருவதாகக் கூறியுள்ளார். தனது கண்ணாடியை அவர் மேசை ஒன்றின் மீது சுழற்றி வைத்து விட்டு வெளியே சென்றுள்ளார்.

தயாமோகனுடன் சுமார் 15 நிமிடங்கள் உரையாடிய அவர், தொலைபேசியை துண்டித்த போது, வேறு ஒரு அழைப்பு வந்தது அந்த அழைப்பில் அவர் பேசிய வண்ணம் கீழே இறங்கி ரியூன் கோட்டலின் சுவருக்கு அருகாமையில் சென்றுள்ளார். அங்கு ஏற்கனவே அவர் சுற்றி வளைக்கப்பட்டிருந்தார் என்பது அவருக்குத் தெரியாது.

### கைது செய்தது யார்?

ஆம் அவரைக் கைது செய்தது Malaysian Special Bureau (MSB) மலேசியாவின் ஸ்பெசல் பியூரோ ஏஜன்ட்.

மலேசியாவில் இயங்கும் மலேசிய ஸ்பெசல் பியூரோ அமைப்பு மலேசிய முடியரசின் அபிமானத்திற்குரிய மற்றும் நம்பிக்கைக்குரிய அமைப்பாகும்.

இவர்களின் நடவடிக்கையை பொலிஸார் கட்டுப்படுத்த முடியாது, மற்றும் இவர்களின் நடவடிக்கை பற்றி மலேசியப் பொலிஸார் அறிந்திருக்கவும் மாட்டார்கள்.

இரண்டாவது தொலைபேசி அழைப்பை மேற்கொண்டவர் தமது அமைப்புக்கு உதவியவர் என மலேசிய ஸ்பெசல் பியூரோவினர் தெரிவித்துள்ளனர்.

5ஆம் திகதி புதன்கிழமை மாலை மூன்று மணியளவில் அவர் மலேசிய ஸ்பெசல் பியூரோ ஏஜன்ட்டுகளால் கைது செய்யப்பட்டார்.

கே.பியின் வாகன சாரதி அப்பு என்றழைக்கப்படுபவரும் கைது செய்யப்பட்டார். அவர்கள் இருவரும் உடனடியாக பாங்கொக் கொண்டு செல்லப்பட்டனர்.

மலேசியாவில் உள்ள தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இந்து அமைப்புக்களுடன் கே.பி. தொடர்புகளை சமீபத்தில் ஏற்படுத்தியிருந்ததே கே.பியின் கைதுக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

மலேசியாவில் உள்ள ஹிந்துராப் அமைப்புடன் கே.பி. தொடர்புகளை மேற்கொண்டதால் மலேசிய அரசாங்கம் அதிர்ச்சிக்குள்ளானது.

ஏற்கனவே அங்கு வாழும் தமிழர்கள், மலேசியாவில் தமக்கு சம உரிமையில்லை என்றும் தம்மை ஒரு இரண்டாம் தர குடிமக்களாகவே அரசு கருதுவதாகவும் கூறிப் பல போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் கே.பி.யின் இந்த நடவடிக்கை மலேசிய அரசுக்குப் பெரும் திண்டாட்டமாக இருந்தது. கே.பி.யை தாமே கைது செய்து நாடு கடத்தியதாக மலேசிய அரசாங்கம் ஒப்புக்கொள்ளுமேயானால் அது அங்கு வாழும் தமிழர்களிடம் மேலும் பல சிக்கல்களைத் தோற்றுவிக்கும் என அஞ்சிய மலேசியா, கைதுசெய்த கே.பியை உடனே பாங்கொக்கிற்கு கொண்டு சென்றது. ஆக, இரண்டு இலங்கை புலனாய்வு அதிகாரிகள் பிரசன்னமாகியிருந்தனர். கே.பி. மலேசியாவில் கைதாகும் போது, அவர்கள் இருவரும் காரில் அமர்ந்திருந்தனர். இதுவே உண்மை.

ஆனால் தாமே கே.பியை கைது செய்தோம், எந்த நாட்டிற்கும் சென்று எவரையும் கைது செய்ய முடியும் என்று இலங்கை அரசு தெரிவித்ததெல்லாம் செய்மதி தொலைபேசியூடாக நடமாட்டத்தை கண்காணித்தே தாம் இந்தக் கைதை மேற்கொண்டதாக இலங்கை அரசு கூறியதெல்லாம் தவறாம்.

5ஆம் திகதி மாலை சுமார் 3.00 மணியளவில் மலேசியாவில் இருந்து கோத்தபாய ராஜபக்ஷவின் கையடக்கத் தொலைபேசிக்கு அழைப்பு ஒன்று வந்ததாகக் கூறப்படுகிறது. அதில் பேசிய ஜெனரல் உதய பெரேரா, கே.பி கைதான விடயத்தைக் கூறியிருக்கிறார்.

உடனடியாக இலங்கை இராணுவ விமானத்திற்குச் சொந்தமான விமானம் ஒன்றில், கேணல் ஷாலில் தலைமையில் சில அதிகாரிகள் பாங்கொக் விமான நிலையத்திற்குப் புறப்பட்டுள்ளனர்.

இலங்கை விமானப்படையினர் பாங்கொக் விமான நிலையத்திற்குப் பல தடவைகள் பறப்பில் ஈடுபட்டிருந்ததாகவும், பாங்கொக் நகரமே கே.பியை இலங்கைக்கு அழைத்துவர ஏற்றது என இலங்கை அதிகாரிகள் மலேசியாவிடம் கேட்டுக் கொண்டதாகவும் கூறப்படுகிறது.

அங்கு சென்ற கேணல் ஷாலில் கே.பி யையும் அவரது வாகன சாரதி அப்புவையும் இலங்கை கொண்டு வந்தனர்.

### சீன அரசாங்கம் அதிர்ச்சியில் ஆழ்ந்துள்ளது

இது இவ்வாறிருக்க கே.பியின் கைது காரணமாக தமிழ் மக்களை விட அதிர்ச்சியில் இருப்பது சீன அரசாங்கமே.

ஏன் என்றால் புலிகளின் மொத்த ஆயுதக் கொள்வனவில் பாதிக்குமேல் ஆயுதங்களை வழங்கும் முக்கிய நாடாகச் சீனா விளங்கியுள்ளது.

இலங்கையுடன் நல்ல நட்புறவைப் பேணி வரும் சீனா மறுபக்கத்தில் புலிகளுக்கும் பல நவீன ஆயுதங்களை வழங்கியுள்ளது.

இலங்கை அரசிற்கு தான் கொடுத்த ஆயுதங்களின் விபரங்களையும் சொல்லி அதனைவிட அதி நவீன ஆயுதங்களைப் புலிகளுக்கு விற்று, நாடகம் ஆடியது சீன அரசு.

தற்போது இந்தியாவிற்கு தலையிடியை ஏற்படுத்தும் நோக்கில் இலங்கையுடன் கைகோத்து நிற்கும் சீனா கே.பி யின் கைது தொடர்பாக படு அதிர்த்திடைந்துள்ளது.

### இராணுவம் கூறும் ஊர்ஜிதமற்ற தகவல்கள்

இலங்கை இராணுவத்தின் கூற்றுப்படி தளபதி ராம் தம்மிடம் அக்கரைப்பற்றில் வந்து சரணடைந்ததாகவும், ராமை வைத்து கே.பி மற்றும் சில முக்கியமான நபர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தியதாகவும் கூறுகின்றனர்.

ராம் காட்டில் இருப்பதாக கூறி அவரே தொலைபேசியில் உரையாடியதால் பல விடயங்கள் வெளிவந்ததாகக் கூறப்படுகிறது.

கே.பியுடன் தொடர்ந்து உரையாடிவந்த தளபதி ராம் கே.பி மலேசியாவில் இருந்து புறப்பட இருந்த திகதிகளையும் இராணுவத்திற்குக் கூறியதாக ஊர்ஜிதமற்ற இராணுவத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இருப்பினும் தமிழீழ விடுதலைப் புலிகளின் வீழ்ச்சிக்குப் பின்னர் அந்த இயக்கத்தை அரசியல் ரீதியாகப் பலப்படுத்துவதை கே.பி. மேற்கொண்டதும் அமெரிக்க அரசில் அவர் கொண்டிருந்த செல்வாக்கும் இலங்கை அரசு அவரைக் கைது செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது எனலாம்.

கடைசி நாட்களில் அவர் தனது பாதுகாப்பில் அக்கறை செலுத்தவில்லை என்பது எல்லோராலும் தெரிவிக்கப்படும் ஓர் விடயமாகும். (ந-5)

அயோக்கியனை கேட்காதே! அவன் தன் கருத்தையே சொல்லிக்கொண்டிருப்பான்.

– ஜப்பான்

வலம்புரி

# சபாஷ்! பாலித கோஹன நாங்கள் நினைத்ததை...

தமிழர் பிரச்சினைக்கு எதற்கு அரசியல் தீர்வு என வெளியுறவுச் செயலாளர் பாலித கோஹன கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பிலிருந்து வெளிவரும் டெய்லி மிரர் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு எதற்கு என கேள்வி எழுப்பும் கோஹன இதற்கு தர்க்க ரீதியில் எந்த அடிப்படையும் இல்லை எனவும் கூறியுள்ளார்.

பாலித கோஹன கூறிய மேற்படி விடயம் தமிழ் மக்களை பொறுத்தவரை அதிர்ச்சிக்குரியதல்ல. ஏன் எனில் தமிழ்மக்கள் காலாகாலமாகச் சிங்கள தலைவர்களால் ஏமாற்றப்பட்டுள்ளனர்.

இந்த ஏமாற்றம் இப்போது மட்டும் இல்லாது போகும் என நினைப்பதற்கு தமிழ் மக்களிடம் தர்க்க ரீதியான காரணங்கள் எதுவும் இல்லை.

ஆனாலும், இருக்கக்கூடிய துன்பத்தை பாலித கோஹன கூறிய விடயம் மேலும் ஒருபடி அதிகரித்து விட்டுள்ளது அவ்வளவுதான்.

பாலித கூறிய விடயம் தமிழ் மக்களுக்கு அதிர்ச்சியைத் தரவில்லை எனக்கூறும் அதே நேரம் துன்பத்தை அதிகரித்துள்ளது எனத் தெரிவிப்பது உடன்பாட்டு எதிர்மறை என்று நீங்கள் நினைக்கலாம்.

இங்கு தான் அதற்கான விளக்கம் தரப்பட வேண்டும்.

அதாவது, பாலித கோஹன பொறுப்பான பதவியை வகிப்பவர். ஒரு நாட்டின் வெளியுறவுச் செயலர் என்பது பொறுப்பான பதவி என்பதுடன் நிதானமாகவும், பக்க சார்பின்றியும் கருத்துக்களைத் தெரிவிக்கும் கடமைப்பாட்டையும் கொண்ட பதவி என்பதும் உணரப்பட வேண்டியது.

நிலைமை இதுவாக இருப்பதுடன் பாலித கோஹன வெளிநாடுகளுக்குச் சென்ற போதெல்லாம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அரசு படாப்பாடுபடுகிறது. இதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சர்வ கட்சிக்குழுவை அமைத்துள்ளார் என்று கூறியவர்.

இப்போது தான் கூறியதை மறந்து, தமிழர் பிரச்சினைக்கு தீர்வு எதற்கு எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

எப்படியிருக்கிறது நிலைமை. இலங்கை வறிய நாடு என்பது உண்மைதான். ஆனால் இலங்கையில் அறிவும், நேர்மையும், நீதியும், வறுமையிலிருப்பது–அதிலும் ஆட்சிப் பீடங்களில் அந்த வறுமை அதிகமாக இருப்பதுதான் துன்பத்துக்கு காரணம்.

எதுவாயினும் பாலித கூறிய கருத்து தமிழர்கள் எதிர்பார்த்த ஒன்றுதான். இதனை இந்த நாட்டின் அதியுச்சமான தலைவர் கூறியிருந்தாலும் தமிழ்மக்கள் எந்த கலக்கமும் கொள்ள மாட்டார்கள் என்பது நிஜம்.

ஆனாலும் பாலித கூறிய கருத்து அவர் ஜனாதிபதி மகிந்தவின் அரசைவிட்டு விலகுவதற்கான அறிகுறியா என்று சந்தேகிப்பது அரசியல் ரீதியில் பொருத்துடையதாக அமையும் அவ்வளவு தான்.

# தற்கொலை தாக்குதல், படுகொலை சம்பவங்களுடன் உயர் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு நேரடித் தொடர்பு

## லக்பிமவில் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி, அமைச்சர்கள் மற்றும் பாதுகாப்பு உயர் அதிகாரிகள் படுகொலை சூழ்ச்சி சம்பவங்களுடன் உயர் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு நேரடித் தொடர்பு காணப்படுவதாக லக்பிம செய்தி வெளியிட்டுள்ளது.

பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் ஜனாதிபதி மீது நடத்தப்பட்ட மற்றும் நடத்தப்பட விருந்த தற்கொலை தாக்குதல் சம்பவங்களுடன் உயர் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு தொடர்பு காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிச்சந்தேக நபர்களிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின் மூலம் இந்தத் தகவல்கள் புலனாகியுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசாங்க உயரதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளை படுகொலை செய்யும் விடுதலைப்புலிகளின் முயற்சிகளுக்கு பாதுகாப்பு அதிகாரிகள் பலர் நேரடியாக ஒத்துழைப்பு வழங்கியுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

இந்த பாதுகாப்புத் தரப்பின் உயர் அதிகாரிகள், ஒரு காவல் துறை அத்தியட்சகர், இரண்டு இராணுவ கேர்ணல்களும், மேஜர்கள் சிலரும் இருப்பதாகவும், இதனை தவிர மேஜர் தரத்திற்கு கீழ் உள்ள பலர் இந்த சம்பவங்களுடன் தொடர்பு பட்டுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் விமானப் படையின் சிப்பாய் ஒரு வரும் அமைச்சர்கள் மற்றும் ஜனாதிபதி கொலை சதியின் பின்னணியில் இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேஜர் ஜெனரல் பாரமி குலதுங்க, அமைச்சர் ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளே ஆகியோர் மீதான தற்கொலை தாக்குதல்களை மேற்கெண்ட தற்கொலை குண்டுதாரிகளுக்கு பாதுகாப்பு தரப்பினரே உதவியுள்ளனர். ஜெனரல் சரத் பொன் சேகா,, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோருக்கு எதிரான தற்கொலை தாக்குதல் முயற்சிகளுடனும் இந்த பாதுகாப்பு தரப்பினர் சம்பந்தப்பட்டுள்ளனர் எனக் குறிப்பிடப்படுகின்றது.

விடுதலைப்புலிகளுக்கு உதவி ஒத்துழைப்புகளை வழங்கிய பல பாதுகாப்பு தரப்பினர் ஏற்கனவே கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள போதிலும், மேலும் சில பாதுகாப்பு அதிகாரிகள் கைது செய்யப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இவர்கள் விடுதலைப் புலிகளுக்கு பாதுகாப்பு தகவல்களை வழங்கியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (ஒ-6)

# இடம்பெயர்ந்த மக்களை உடன் மீளக் குடியமர்த்துக! அமெரிக்கா வலியுறுத்து

(நியூயோர்க்)

இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியேற்ற விடயத்தில் முன்னேற்றத்தை ஏற்படுத்தாவிட்டால் அனைத்துலக சமூகத்தின் ஆதரவை இலங்கை அரசு இழக்க வேண்டிய நிலைமை ஏற்படும் என அமெரிக்கா கடுமையாக எச்சரித்திருக்கின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை அரசு தோற்கடித்திருப்பதை வரவேற்பதாக தெரிவித்த அமெரிக்காவின் தென்னாசிய விவகாரங்களுக்கு பொறுப்பான உதவிச் செயலாளரும் இலங்கைக்கான முன்னாள் அமெரிக்க தூதுவருமான ரொபேட் ஓ பிளேக், இருந்த போதிலும் இடம் பெயர்ந்த 2 இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் அதிகமான மக்களை உடனடி யாக அரசு மீளக் குடியமர்த்துவதுடன் அரசியல் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு நடைமுறை சாத்தியமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

அனைத்துலக சமூகத்தினால் இலங்கை மதிக்கப்படுவதாக தெரிவித்த பிளேக், அமெரிக்காவும் ஏனைய நாடுகளும் மட்டுமன்றி கடன் வழங்கும் நாடுகள், உதவி நிறுவனங்கள் மற்றும் அனைத்துலக மனிதாபிமான நிறுவனங்களும் மீள் குடியேற்றம் தாமதமாவதை இட்டு தமது கரிசனையை வெளியிட்டு வருவதாக சி.என்.என். தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

இருந்த போதிலும் இடம் பெயர்ந்தவர்களின் மீள் குடியேற்றம் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் போன்ற வற்றில் அரசு எந்தளவுக்கு முன்னேற்றகரமான நடவடிக்கைகளை மேற்கொள்கிறது என்பதில் எதிர்கால உதவிகள் தங்கியிருக் கலாம் என்றார். (ந-5)

எண்ண விதைகளை நடுகை செய்வோம்

எண்ணம் என்ற விதைகளை மனதைக் கீறி அதில் நடுகை செய்வோம்.

பொதுவாக விதைகள் முளைக்கும் போது வேர் பகுதி முதலில் உருவாக்கப்பட்டு சில நாட்கள் வளர்ந்த பின் தான் அதன் தண்டுப் பகுதி இலை கொள்கிறது அது போலவே




சிவாலே சமாளி

மருத்துவ கலாநிதி வெ.நாகநாதன்

மனிதனுக்கும் வேரான மனோதிடம் வேண்டும். உறுதியாக இங்கு வேர்கள் தான் துன்பமான இலையுதிர் காலத்தில் இறவாது காக்கின்றன.... அதுபோலவே மனோதிடம் என்ற வேர் உருவாக்கப்படின் அது துன்பம் என்ற கொடும் பொழுதில் எம்மை உயிர் காக்கும்.

எனவே நாம் மனதில் விதையிடுவோம் - மரமாகும் ... நாளை இன்பக் கனிக் கூட்டம் எமக்கே சொந்தம். ②

# இயேசுவோடு நாம்–Hero இல்லையேல் Zero



விருப்பு வெறுப்பு இல்லாத கடவுளின் திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவருக்கு எப்போதும் எவ்விடத்திலும் துன்பம் இல்லை.

அதாவது, எந்த ஒரு மனிதனும் தனித்தீவு கிடையாது, மாறாக மனிதன் ஒரு சமூகப்பிராணி அவன் சார்ந்தும் சேர்ந்தும் வாழ வேண்டியது படைப்பின் நியதி. எனவே தான்

## பரமபிதா காட்டிய பாதை

இறைவன் படைத்த போதே ஆணும் பெண்ணுமாஶ்ரீகப்படைத்தார். ஆனால் மனிதனைப் படைத்தபோது மட்டும் தனியாகப் படைத்தார். தனியாப் படைக்கப்பட்ட மனிதன் தனிமையை உணர்ந்தான் இன்பத்தையும், மகிழ்ச்சியையும் இழந்தான். மனிதப் படைப்பிலே ஏதோ தவறு நேர்ந்துவிட்டதை உணர்ந்த இறைவன், மனிதன் தனிமையாய் இருப்பது நன்றன்று அவனுக்குத் தகுந்த துணையை உருவாக்குவேன் என்று சொல்லி அவனுக்கு இணையான ஏவாளைப் படைத்து துணையாகத்தந்தார்.

ஆனால் என்றைக்கு ஏவாள் ஆதாமைவிட்டுத் தனியாகச் சென்றாளோ, அன்றே சாத்தான் நுழைந்தான், பெண்ணைச் சோதித்தான், அவர் வழி ஆதாமையும் பாவத்தில் இழுத்தான். ஆம் தனிமைதான் எல்லாத் துன்பங்களுக்கும், எல்லாத் தவறுகளுக்கும். எல்லா பாவங்களுக்கும் எல்லாத் தோல்விகளுக்கும் காரணம் ஏனெனில் அது இறைவனின் படைப்புத் திட்டத்திற்கு எதிரானது.

ஆம், இறைவனோடு என்று இருக்கின்றோமோ, அன்று நமக்கு வாழ்வு என்று அவரை விட்டுபிரிகின்றோமோ அன்றே நமக்கு சாவு

இது தான் இன்றைய நற்செய்தியின் மையக்கருத்து. அதாவது மக்கள் அனைவரையும் ஓரிடத்தில் ஒன்று கூட்டி இறைவன் அது வரை அவர்களுக்குச செய்து வந்த அனைத்து நலன்களையும் நினைவு கூறச்செய்து இறைவனுக்கு உண்மையுள்ளவர்களாக இருந்து ஓரே இறைவனை மட்டுமே வழிபடச் சொன்னார். அவ்வாறு இறைவனோடு இருந்தவர்கள் வாழ்வு பெற்றனர்.

இன்றைய நற்செய்தி வாசகமும் இதைத்தான் மையப்படுத்துகின்றது. இன்றைய நற்செய்தியை கடந்தவார நற்செய்தியின் தொடர்ச்சியாகப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கும் போது கடந்தவராம் நற்செய்தியில் இயேசு தன்னையே விண்ணக உணவாகத் தந்து தன் சதையை உண்பவன் என்றுமே வாழ்வான் என்றார்.

அதாவது அப்போஸ்தலக்குழுவின் தலைவராக இருந்த பேதுரு சொன்னார் ஆண்டவரே நாங்கள் யாரிடம் போவோம் நிலை வாழ்வை அளிக்கும் வார்த்தைகள் உம்மிடம் தானே உள்ளன, ஆம் பேதுரு படிக்காதவராக இருந்திருக்கலாம். ஆனால் இயேசுவின் மீத பக்தி கொண்டிருந்தார். அவர் சில வேளைகளில் கோழையா இருந்திருக்காலம். ஆனால் உண்மையுள்ளவராக இருந்தார். ஆம் போதுரு இயேசுவோடு இருந்த போது Hero வாக இருந்தார். இயேசுவை மறுதலித்த போது அவர் Zero வாக மாறினார். நாம் அனைவரும் இன்று இயேசுவோடு இணைந்து வாழ அழைக்கப்படுகின்றோம்.

ஆம் நாம் அனைவரும் தாயும் தந்தையுமான இயேசுவைப் பற்றிக் கொள்வோம். வாழ்வில் நிறைவைக்காண்போம்.

ஜோன் ரொபேர்ட்

# ஹோமியோபதி சிகிச்சைகள் தொடர்பில்

## உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை

எயிட்ஸ் காசநோய் மற்றும் மலேரியா போன்ற நோய்களுக்கு ஹோமியோபதி முறையில் நோய்க் காரணியைப் பயன் படுத்தி சிகிச்சை அளிப்பது தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.


அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் மேற்படி நோய்களுக்கு ஹோமியோபதி சிகிச்சையளிப்பதற்கு ஊக்குவிப்பு செய்யப்பட்டு வருவது மக்களின் வாழ்வை பாரிய அபாய நிலைக்கு இட்டுச் செல்லக் கூடும் என இளம் விஞ் ஞானா வலைப்பின்னல் அமைப்பைச் சேர்ந்த ஆராய்ச்சிக்குழுவினர் உலக சுகாதார ஸ்தாபனத்தின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்தே அது இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

மேற்படி நோய்களுக்கு சிகிச்சையளிப்பதற்கும் நோய்த் தடுப்பை வழங்குவதற்கும் ஹோமியோபதி சிகிச்சை எதுவித நன்மையையும் தராது அத்துடன் இந்த நோய்களுக்கு ஹோமியோபதி சிகிச்சையை வழங்குவது அபாயமிக்கது என உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. (ஓ-6)

# சட்டவிரோத குடியேற்றவாசிகள்

# 75 பேர் உணவு நீரின்றி பலி

## இத்தாலிய கடற்பரப்பில் சம்பவம்



ஆபிரிக்க நாடான லிபியாவிலிருந்து பட கொன்றில் இத்தாலிக்குப் புறப்பட்ட சுமார் 75 சட்டவிரோத குடியேற்றவாசிகள் நீரில் மூழ்கி பலியாகியுள்ளனர்.

அவர்களில் பலர் பசியாலும் தாகத்தாலும் இறந்ததுடன் சிலர் நீரில் மூழ்கி பலியாகியுள்ளனர்.

12அடி நீளமான மேற்படி படகில் அளவுக்கதிகமான சட்டவிரோதக் குடியேற்றவாசிகள் ஏற்றப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

மால்டாவுக்கும் லம்பெதுஸா தீவுக்கும் இடையிலுள்ள இத்தாலியக் கடற்பரப்பில் காணப்பட்ட மேற்படி படகிலிருந்து ஐவரை இத்தாலி கடற்கரை பாதுகாப்புப் படையினர் மீட்டெடுத்துள்ளனர்.

பெண்ணொருவர் குழந்தையொன்று மற்றும் 3 எரிதிரிய ஆண்கள் ஆகியோரே மேற்படி மீட்கப்பட்ட ஐவருமாவர்

லிபிய கடற்கரையிலிருந்து 3 வாரங்களுக்கு முன் படகில் புறப்பட்ட மேற்படி சட்ட விரோத குடியேற்றவாசிகள் உணவு நீர் மற்றும் எரிபொருள் இன்றி உயிருக்காக போராடியுள்ளனர்.

இந்நிலையில் தாகத்தைத்தீர்க்க் கடல் நீரை குடித்த பலர் ஒருவர் பின் ஒருவராக இறந்ததாகவும் அவர்களது சடலங்களை கடலில் வீசியதாகவும் உயிர்பிழைத்தவர்கள் தெரிவித்தனர்.


உயிர் பிழைத்தவர்களில் இருவரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஆபிரிக்கா நாடுகளிலிருந்து ஐரோப்பாவுக்குள் பிரவேசிக்கும் நோக்கில் ஒவ்வொரு மாதமும் நூற்றறுக்காணக்கான சட்டவிரோத குடியேற்வாகள் இத்தாலிய லம்பெதுஸா தீவை வந்தடைகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந் நிலையில் மேற்படி சட்டவிரோத குடியேற்ற வாசிகளின் பிரவேசத்தைத் தடுப் பதற்கு மேற்படி பிரவேசத்தை ஒரு குற்றச் செயலாக கருதி சம்பந்தப்பட்டவர்களை கைது செய்து சிறையிலடைக்கவும் தண்டப்பணத்தை அறவிடவும் வழிவகை செய்யும் புதிய சட்டமொன்றை இத்தாலி அண்மையில் அறிமுகப்படுத்தியுள்ளது. (ஓ-6)

# ஆப்கான் ஜனாதிபதி தேர்தல்; ஹமீட் கர்சாய் வெற்றி

## அவரது பிரசாரத் தலைவர் தெரிவிப்பு



ஆப்கானிஸ்தான் தேர்தலில் ஜனாதிபதி ஹமீட் கர்ஸாயே முன்னிலையில் உள்ளதாகவும் இரண்டாவது சுற்று வாக்கெடுப் பொன்றை எதிர் கொள்ள அவசிய மற்ற வகையில் அவர் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று உள்ளதாகவும் அவரின் பிரசார தலைவர் டீன் மொஹமட் தெரிவித்தார்.

அதேசமயம் ஹமீட் கர்ஸாயின் பிரதான போட்டியாளரான அப்துல்லா அப்துல்லாவும் தானே இத்தேர்தலில் வெற்றி பெற்றுள்ளதாக உரிமை கோரியுள்ளார்.

உத்தியோகபூர்வ தேர்தல் பெறுபேறுகள் வெளியிடப்படாத நிலையில் தேர்தல் வெற்றி தொடர்பில் இவ்வாறு தகவல்கள் வெளியிடுவது தொடர்பில் அந்நாட்டு தேர்தல் அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

மேற்படி உத்தியோகபூர்வ தேர்தல் பெறுபேறுகள் வெளிவர இருவாரங்கள் வரை செல்லலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஓ-6)

# இலங்கை வாலிபர் உட்பட மூவருக்கு பன்றிக் காய்ச்சல் அறிகுறி

(ஆலந்தூர்)

கொழும்பில் இருந்து சென்னைக்கு வந்த இலங்கை வாலிபர் உட்பட 3 பேருக்கு பன்றி காய்ச்சல் அறிகுறி இருந்ததால் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் மீனம்பாக்கம் விமான நிலையத்தின் பன்னாட்டு முனையத்திற்கு கொழும்பில் இருந்து ஒரு விமானம் வந்தது. அதில் வந்த பயணிகளுக்கு பன்றி காய்ச்சல் உள்ளதா? என விமான நிலைய சிறப்பு டாக்டர்கள் குழுவினர் சோதனை மேற்கொண்டனர்.

அப்போது இலங்கை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அரவிந்தன் (வயது30) என்பவரை டாக்டர்கள் சேதனையிட்டனர். அதில் அரவிந்தனுக்கு பன்றி காய்ச்சல் இருப்பதற்கான அறிகுறிகள் காணப்பட்டது.

இதேபோல் சிங்கப்பூரில் இருந்த வந்த அசோக் நகரை சேர்ந்த சவுந்தரி நாராயணன் (50) என்பவரை சோதனை போட்டபோது பன்றி காய்ச்சலுக்கான அறிகுறி கண்டறியப் பட்டது. மேலும் துபாய் நாட்டில் இருந்து வந்த சென்னை வடபழனியை சேர்ந்த ஜெயராஜ் (49) என்பவருக்கும் பன்றி காய்ச்சல் அறிகுறி இருந்தது.

பன்றி காய்ச்சல் அறிகுறி காணப்பட்ட இலங்கை வாலிபர் உட்பட 3 பேருக்கும் டாக்டர்கள் முதலுதவி அளித்தனர். பின்னர் தண்டையார் பேட்டையில் உள்ள தொற்று நோய் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அம்புலன்சில் அனுப்பி வைத்தனர்.

அங்கு தனி வார்டில் 3 பேரும் அனுமதிக்கப்பட்டனர். இரத்த பரிசோதனை செய்யப்பட்ட பின் தான் இவர்களுக்கு பன்றி காய்ச்சல் உள்ளதா என உறுதிப்படுத்தப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர். (ஓ-6)

# பாகிஸ்தானில்

# அமெரிக்க ஏவுகணை தாக்குதலில் அப்பாவிகள் உட்பட 12 பேர் பலி

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் அமெரிக்கா ஆளில்லாத விமானம் மூலம் நடத்திய ஏவுகணை தாக்குதலில் பெண்கள், குழந்தைகள் உட்பட 12 பேர் பலியானார்கள்.

பாகிஸ்தானில் ஆப்கானிஸ்தான் எல்லையை ஒட்டியுள்ள பழங்குடியின பகுதிகளில் தலீபான் மற்றும் அல்கொய்தா திவீர வாதிகள் பதுங்கி உள்ளனர். அவர்களை ஒடுக்குவதற்காக அமெரிக்க உளவுத்துறையான சி.ஐ.ஏ. ஆளில்லாத விமானங்கள் மூலம் ஏவுகணை தாக்குதல் நடத்தி வருகிறது. பாகிஸ்தான் அரசின் எதிர்ப்பையும் மீறி, ஓராண்டுக்கும் மேலாக இத்தகைய தாக்குதல்களை நடத்தி வருகிறது.

இந் நிலையில் பாகிஸ்தான் வடக்கு வசீரிஸ் தான் பிராந்தியத்தில் உள்ளே தண்டே டார்ப கேல் கிராமத்தில் நேற்று முன்தினம் ஆளில்லாத விமானம் மூலம் அமெரிக்கா ஏவுகணை தாக்குதல் நடத்தியது.

அங்கு ஆப்கானிஸ் தான் மூத்த தலிபான் தலைவர் ஜலாலுதின் ஹக்கானி அமைத்துள்ள மதரசா உள்ளது. அதையொட்டி கட்டிடத்தில் ஹக்கானி உள்ளிட்ட தீவிரவாதிகள் பதுங்கி இருப்பதாக கரு தப்படுகிறது. எனவே அக்கட்டிடத்தை குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டது.

அந்த கட்டிடத்தில் 5 வீடுகள் உள்ளன. அடுத்தடுத்து 2 ஏவுகணைகள் வீசப்பட்டதில் 5 வீடுகளும் இடிந்து விழுந்தன. அங்கிருந்த 8 பெண்கள், 2 குழந்தைகள் உட்பட 12 பேர் பலியானார்கள். (ஓ-6)

# பிரபாகரன் திரைப்படம் மாவீரர் தினத்திற்கு பின் படப்பிடிப்பு ஆரம்பம்

## இயக்குநர் ஏ.எம்.ரமேஷ் தெரிவிப்பு

(சென்னை)

விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைப் பற்றி இயக்குநர் ஏ.எம் ஆர்.ரமேஷ் திரைப்படம் இயக்கவுள்ளார். இப் படப்பிடிப்பு டிசம்பர் மாத்தில் தொடங்கப்படவுள்ளது.

விடுதலைப்புலிகிளன் தற்கொலையாளிகளைப் பற்றி ஏற்கனவே இவர் இயக்கிய சயனைட் திரைப்படம் விருதுகளையும் பெற்றுள்ளது.

இதுகுறித்து இயக்குனர் ரமேஷ் தெரிவிக்கையில்,

பிரபாகரனைப்பற்றிய படத்துக்கான திரைக்கதை தயாராகிவிட்டது. ஆனால் பிரபாகரனாக யார் நடிப்பது என்பது இன்னும் முடிவாக இன்னும் முடிவாகவில்லை இன்னும் பெயர் வைக்கப்படாத இந்த திரைப்படம் தமிழ் ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் தயாரகவுள்ளது.

அந்தப் பாத்திரத்தில் நடிப்பதற்கு மிகத் திறமையுள்ள நடிகரை நான் தேர்ந்தெடுக்க வேண்டும் ஆனால் ஏற்கனவே தமக்கு என இமேஜ் ஒன்றைக் தொண்டிருக்கும் நடிகர் எவரும் வேண்டாம் என்று தெரிவித்துள்ளார்.

மேலும் எதிர்வரும் நவம்பர் 27ஆம் நாளுக்குப் பின்னர் தான் படப்பிடிப்பை தொடங்குவதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

நவம்பர் 27ஆம் நாளை கடந்த இரு பத்தாண்டு காலமாகப் புலிகளின் தலைவரும் தமிழ் மக்களும் மாவீரர்கள் நாளாகக் கடைப் பிடித்துவருகின்றனர்.

அந்த நாளில் பிரபாகரன் தனது உறுப்பினர்களுக்கும் மக்களுக்கும் உரையாற்றுவது வழக்கம்.

எதிர்வரும் நவம்பர் 27ஆம் நாளில் பிரபாகரன் நாட்டு மக்களுக்கு உரையாற்றவில்லை எனில் அது பிரபாகரனைக் கொன்றுவிட்டதாக இலங்கைப் படையினர் கூறுவதை மேலும் உறுதிப்படுத்திவிடும் என உலகு எங்கும் உள்ள புலிகள் ஆதரவாளர்கள் கவலைப்படுகிறார்கள்.

அப்படி அவர் நவம்பர் 27ஆம் நாள் மக்கள் முன் வரவில்லை என்றால் எனது திரைக் கதையிலும் உச்சக்கட்டக் காட்சியிலும் நான் மாற்றங்களைக் கொண்டுவருவேன் என்று தெரிவித்துள்ளார். (ஓ-6)

# ராவண் படம் மீண்டும் சர்ச்சையில் படக்குழு மீதுவழக்குப்பதிவு

(மும்பை)

ஐஸ்வர்யா ராய் நடிக்கும் ராவண் படத்தின் படப்பிடிப்புக் குழுவைச் சேர்ந்த 14 பேர் மீது வனத்துறை அதிகாரிகள் வழக் குப்பதிவு செய்ததுடன் வாகனங்களை பறிமுதல் செய்தனர்.

பிரபல இயக்குனர் மணிரத்தினம் தனது மெட்ராஸ் டாக்கீஸ் பட நிறுவனம் சார்பில் ராவண் என்ற படத்தை தமிழிலும் இந்தியிலும் தயாரித்து இயக்கி வருகிறார் இந்திப் படத்தில் அபிஷேக் பச்சன் கதாநாயகனாகவும் தமிழ்ப் படத்தில் விக்ரம் கதாநாயகனாகவும் நடித்துவருகிறார்கள். இரு மொழியிலும் ஐஸ்வர்யாராய் கதாநாயகியாக நடித்து வருகிறார் மேலும் பிரபு கார்த்திக் பிருதிவிராஜ் பிரியாமணி உள்ளிட்டோரும் நடித்து வருகிறார்கள்.

இப்படத்தின் அடுத்தகட்ட படப்பிடிப்பு மராட்டிய மாநிலம் தானே மற்றும் புனே மாவட்ட எல்லைகளை ஒட்டியுள்ள அடர்ந்த காட்டுப் பகுதியில் நடைபெறவுள்ளது.

இந்நிலையில் இந்தபடத்தின் படப்பிடிப்புக் குழுவைச் சேர்ந்த 14 பேர் மராட்டிய வனத்துறை அதிகாரிகள் வழக்குப்பதிவு செய்துள்ளனர். இது குறித்து வளத்துறை துணை பாதுகாவலர் சுபாஷ் ஷெல்கே கூறியதாவது,

சம்பந்தப்பட்ட காட்டுப்பகுதியில் கடந்த வாரம் வனத்துறை அதிகாரிகள் வழக்கமான ஆய்வுக்கு சென்றனர். அப்போது அங்கு படப்பிடிப்புக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன நிலப்பகுதியை வெட்டி சமப்படுத்தி இருந்தனர். ஆனால் படிபடிப்பு நடத்த அனுமதி பெறவில்லை.

எனவே அனுமதியின்றி சட்டவிரோதமாக காட்டுப்பகுதிக்குள் நுழைந்ததற்காகவும் வனச் சொத்துக்களை சேதப்படுத்தியதற்காகவும் ராவண் படப்பிடிப்புக் குழுவவைச் சேர்ந்த 14 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. வன பாதுகாப்பு சட்டம் 1980 மற்றும் இந்திய வன சட்டம் 1927 ஆகியவற்றின் பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப் பட்டுள்ளது என்றார். (ஓ-6)

# இலங்கை அணி அபார வெற்றி; நியூசிலாந்து போராட்டம் வீண்

(காலி)

முரளிதரன், மெண்டிஸ், துஷார கூட்டணியின் துல்லியமான பந்து வீச்சின் மூலம் முதலாவது டெஸ்டில் இலங்கை அணி 202 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து அணியை வீழ்த்தியது.

இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி 2 டெஸ்ட், 2 இருபது -20 மற்றும் முத்தரப்பு ஒரு நாள் தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் கடந்த 18 ஆம் திகதி காலி சர்வதேச விளையாட்டரங்கில் ஆரம்பமானது. இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 452 ஓட்டங்களை எடுத்தது.



தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 299 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதனடிப்படையில் முதலாவது இன்னிங்ஸில் 153 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்ற இலங் கை அணி 2 ஆவது இன்னிங்ஸில் துடுப் பெடுத்தாடி 4 விக்கெட்டுக்களை இழந்து 259 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தி நியூசிலாந்து அணிக்கு வெற்றி இலக்காக 413 ஓட்டங்களை நிர்ணயித்தது.

பதிலுக்கு 2 ஆவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி நேற்று முன்தினம் 4 ஆம் நாள் ஆட்டநேர முடிபில் ஒரு விக்கெட்டை இழந்து 30 ஓட்டங்களை எடுத்தது.

இந்நிலையில் 5 ஆவதும் இறுதி நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத் தாடிய நியூசிலாந்து அணி ஆரம்பம் முதலே விக்கெட்டுக்களை பறிகொடுத்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் குப்தில் 18 ஓட்டங்களுடனும் மக்கின் தோஷ் பூச்சித்துடனும் ரோஸ் ரெயிலர் 16 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க நியூசிலாந்து அணி 45 ஓட்டங்களை எடுத்து 4 விக்கெட்டுக்களை இழந்தது.

எனினும் 5 ஆவது விக்கெட்டுக்காக இணைந்த ஓரம், விக்டோரி ஜோடி நிதானமாக துடுப்பெடுத்தாடி அணியை சரிவிலிருந்து மீட்டது. இந்த ஜோடி நிதானமாக துடுப்பெடுத்தாடி 41 ஓட்டங்களை எடுத்த போது ஜேக்கப் ஓரம் 21 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய வீரர்கள் ஓரளவு ஜொலித்தபோதும் நியூசிலாந்து அணி இரண்டாவது இன்னிங்சில் 210 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்து 202 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.


இதில் டானியல் விக்டோரி 67 ஓட்டங்களையும் மக்குலம் 29 ஓட்டங்களையும் ரைடர் 24, புட்டேல் 22 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் முரளிதரன் 3 விக்கெட்டுக்களையும் துஷார, மென்டிஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் குலசேகர, மகேல ஜெயவர்த்தன ஆகியோர் தலா ஒரு விக் கெட்டுக்களையும் வீழ்த்தினர். இவ் வெற்றியின் மூலம் இலங்கை அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

இப் போட்டியின் ஆட்ட நாயகனாக முதலாவது இன்னிங்ஸில் 92 ஓட்டங்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 123 ஓட்டங்களையும் அதிரடியாக குவித்து இலங்கை அணியின் வெற்றிக்கு திருப்பு முனையாக அமைந்த திலகரட்ண டில்சான் ஆட்டநாயகனாக தெரிவானார்.

இரு அணிகளுக்கிடையிலான தீர்க்க மானதும் இறுதியுமான டெஸ்ட் எதிர்வரும் 26ஆம் திகதி கொழும்பில் எஸ்.எஸ்.சி. மைதானத்தில் ஆரம்பமாகிறது.

# உலக சம்பியன்ஷிப் தடகளப் போட்டியில் 200 மீ. ஓட்டத்திலும் போல்ட் சாதனை




(பேர்லின்)

உலக தடகளப் போட்டிகளில் 200 மீற்றர் ஓட்டத்திலும் ஜமெக்கா வீரர் உஷேன் போல்ட் உலக சாதனை படைத்து அசத்தினார்.

உலக தடகள சம்பியன் ஷிப் போட்டிகள் ஜேர்மனி தலைநகர் பேர்லினில் நடந்து வருகின்றது. இதில் 100 மீற்றர் ஓட்டத்தில் உலக சாதனை படைத்த(9.58 வினாடி) ஜமெக்கா வீரர் உஷேன் போல்ட் 200 மீற்றர் ஓட்டத்திலும் புதிய உலக சாதனை படைத்து தங்கப் பதக்கம் வென்றார்.

அவர் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்தினார். அவரது வெற்றிக்கு அச்சுறுத்தலாக மற்ற வீரர்கள் யாரும் ஈடுகொடுக்கவில்லை.

பனாமா நாட்டு வீரர் அலோன்சா எட்வர்ட் (19.81 வினாடி) வெள்ளிப் பதக்கமும் அமெ ரிக்க வீரர் வாலாஸ் ஸ்பியர்மோன்(19.85 வினாடி) வெண்கலப் பதக்கமும் பெற்றனர்.

உஷேன் போல்ட் பந்தயத் தூரத்தை 19.19 வினாடியில் கடந்து புதிய சரித்திரம் படைத் தார். கடந்த ஆண்டு பீஜிங்கில் நடந்த ஒலிம் பிக் போட்டியில் உஷேன் போல்ட் பந்தயத் தூரத்தை 19.30 வினாடியில் கடந்ததே சாத னையாக இருந்தது.

பீஜீங் ஒலிம்பிக் போட்டியில் 100 மற்றும் 200 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் புதிய உலக சாதனை படைத்து தங்கப் பதக்கம் வென்றது போல் இந்த உலக சம்பியன் ஷிப் தடகளப் போட்டியிலும் உஷேன் போல்ட் இரட்டை உலக சாதனை படைத்து தங்கப்பதக்கத்தை கைப் பற்றியுள்ளார்.

**எதிர்பார்க்கவில்லை**

சாதனை படைத்த 22 வயதான உஷேன் போல்ட் கூறியதாவது;

உலக சாதனை படைப்பேன் என்று நான் எதிர்பார்க்கவில்லை. நான் மிகவும் களைப் பாக இருந்தேன். இதனால் எனது சிறப்பான திறனை வெளிப்படுத்த முயற்சிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் செயல்பட்டேன்.

நல்ல தொடக்கம் அமைந்தது சாதனைக்கு வழிவகுத்தது. ஓய்வு பற்றிய எண்ணம் எது வும் எனக்கு இல்லை. வேகமாக ஓடவேண்டும் என்பதுதான் எனது மனதில் நிறைந்து இருக்கின்றது.

தடகளப் போட்டியில் மிகப்பெரிய ஜாம்பவானாக வரவேண்டும் என்பது எனது நோக் கம் ஆகும். அந்த நோக்கத்திற்கு உரிய பாதையில் நான் சிறப்பாகப் பயணித்து வரு வது எனக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது.

முடியாதது என்று எதுவும் கிடையாது. கடினமாக உழைத்தால், கடினப்பயிற்சி செய் தால் சாதிக்கலாம். நான் தொடர்ந்து கடினப் பயிற்சி மேற்கொண்டு வருகின்றேன்.

100 மீற்றர் தூரத்தை 9.40 வினாடியில் நான் கடப்பேன் என்று சொல்லவில்லை. அது தான் மனிதனின் எல்லையாக இருக்கும் என்றுதான் கூறினேன்.

ஊக்கமருந்து பிரச்சினை குறித்து கேள்வி கேட்பதால் எனக்கு எந்த வருத்தமும் இல் லை. நான் எந்தத் தவறும் செய்யவில்லை. இங்கிலாந்து ராணியால் வழங்கப்படும் சேர் பட்டம் கிடைத்தால் மிகவும் சிறப்பான அங்கீ காரமாக இருக்கும் என்று நினைக்கின்றேன் என்றார்.

## பாகிஸ்தான் அணியில் மீண்டும் ஆசிப் சேர்ப்பு

சம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் தொடர் தென்னாபிரிக்காவில் செப்ரம்பர் 22 ஆந் திகதி தொடங்குகிறது. இந்த தொடருக்கான பாகிஸ்தான் அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஊக்க மருந்து பிரச் சினையில் சிக்கி ஒரு ஆண்டு தடை முடிந்த வேகப்பந்து வீச்சாளர் முகமட் ஆசிப் அணியில் மீண்டும் இடம் பிடித்துள்ளார். இலங்கை சுற்றுப்பயணத்தில் இடம் பிடித்த அப்துல் ரஷாக் அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் அணி வருமாறு;

யூனிஸ்கான் (அணித்தலைவர்), இம்ரான் நஷீர், மிஸ்பா உல்-ஹக், முகமெட் யூசுப், உமர் அக்மல், சோயிப் மலிக், சயிட் அப்ரிடி, பவாத் அலிம், ராணா நவித், கம்ரன் அக்மல், ராவ் இப்திகர், முகமட் ஆசிப், முகமட் அமீர், சயீத் அஜ்மல், உமர்குல்.

**Motor Cycle விற்பனைக்கு**

C.D.125 BENLY MOTOR CYCLE (FIRST OWNAR) விற்பனைக்கு உண்டு. நெல்லியடி சுப்பமாக்கற் கடையில் தொடர்பு கொள்ளவும்.

தொ.பே. :- 0776509997

(3296)

**காணி விற்பனைக்கு**

மானிப்பாய் சந்தைக்கு மிக அண்மையில் அமைதியான சூழலில் இரு வீடுகள் கட்டக்கூடிய 4 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

தொடர்புக்கு : 0776916929

(3299)

**மணமகள் தேவை**

30 வயதுடைய கனடாவில் இருந்து வந்துள்ள 8 செவ்வாயுள்ள மணமகனுக்கு விஸ்வ குலத்திலுள்ள மணமகள் தேவை.

தொடர்பு;
கொழும்பு : 0112943298
யாழ்ப்பாணம் : 0776624428

(3294)

**வாடகைக்கு அறைகள்**

வாடகைக்கு அறைகள் யாழ். மருத்துவ பீடத்துக்கு முன்பாக உணவு வசதிகளுடன் உண்டு. (மாணவர்களுக்கு மட்டும்)

5/6, கருவப்புலம் லேன், ஆடியபாதம் றோட், கொக்குவில்.

(3280)

# பிரபாகரனைக் காப்பாற்ற...

பத்திரிகை ஆஃப்டன்போஸ்டன் கூறி உள்ளது. நோர்வே தூதுவரான மோனா யூல், ஐ.நாவுக்கு அனுப்பிய கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நா. மற்றும் சர்வதேச தலையீடுகள் தேவைப்பட்ட சந்தர்ப்பத்தில் எல்லாம் பான் கீ மூன் அமைதியாக இருந்துள்ளார். பான் கீ மூன் ஒரு தகுதியில்லாத செயலர் என்ற கோணத்தில் அவருடைய பதவிநோக்கப்படுவதற்கு இலங்கை ஒரு முக்கிய விடயமாகப் பார்க்கப்படுகிறது. சமீபத்தில் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டு படைநடவடிக்கையில் நடைபெற்ற பாரதூரமான மனித அவலங்களை அவர் நேரடியாகச் சென்று பார்த்தும் கூட அது பற்றி எதுவித அக்கறையும் மகிந்த அரசுக்குக் காண்பிக்கவில்லை.

இது போல படு மோசமான அராஜக இராணுவ ஆட்சி நடந்து வருகின்ற மியன் மாரில் எதிர்க் கட்சித் தலைவியும், அமைதிக் கான நோபல் பரிசு பெற்றவருமான ஆங் சான்சூயி வீட்டுக்காவலில் இருப்பதற்கும் தகுந்த நடவடிக்கை எடுக்க பான் கீ மூன் தவறியுள்ளார் என இக்கடிதத்தில் திட்டவட்டமாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஆனால் இந்தக் கடிதத்தின் அங்கீகாரம் பற்றி நோர்வே வெளிநாட்டு அமைச்சின் பேச்சாளர் கருத்துத் தெரிவிக்க மறுத்து விட்டார். நோர்வே மொழியில் உள்ள இக்கடிதமானது பான் கீ மூன் நோர்வேக்கு எதிர்வரும் 31ஆம் திகதி விஜயம் செய்யவுள்ள நிலையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதேபோல பாகிஸ்தான், டார்பார், சோமாலியா, சிம்பாவே மற்றும் மிகச் சமீபமாக கொங்கோ நாடுகளில் நடைபெறும் பிரச்சினைகளுக்கும் பான்கீ மூன் ஒருவித நடவடிக்கையும் எடுக்காமல் உள்ளார்.

இவரோடு சர்வதேச விவகாரங்களை பேச முடியாதுள்ளதாகவும், எப்படி உலக விவகாரத்தை கையாள்வது என்ற தொழில் நுட்பம் தெரியாத ஒருவராகவும், பேசும் போது கோபமாக சகலதையும் நிராகரிப்பவராகவும் இவர் இருப்பதாகவும் அக்கடிதத்தில் மேலும் கூறப்படுகிறது.

ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ மூனின் நடவடிக்கைகள் காரணமாக பிரபாகரனை காப்பாற்ற முடியவில்லை எனவும் அவர் அக்கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

பிரபாகரனை காப்பாற்றும் நோக்கில் பான் கீ மூனை இலங்கைக்கு அனுப்பி வைக்கத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் முயற்சி பலனளிக்கவில்லை எனவும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என. திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

(ந-5)

அழகிய தங்க நகைகளை செய்து பெற்றுக்கொள்ள நாட வேண்டிய ஸ்தாபனம்
ஆசைப்பிள்ளை அன் சன் நகைமாடம்
இல. 10, பஸ் நிலையம், சங்கானை.
(C-2928)

## பிறப்பு பத்திரம் இல்லாத மாணவர்களும்...

பிரகாரம் பரீட்சைகள் திணைக்களம் இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளது.

இதற்கமைய சகல பாடசாலைகளிலும் உள்ள பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இல்லாத மாணவர்கள் தொடர்பான தகவல்கள் பரீட்சைகள் திணைக்களத்திற்கு வழங்கப்பட வேண்டும் எனவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

24 மணித்தியாலமும் செயற்படும் விசேட பிரிவொன்றும் இதற்கென நிறுவப்பட்டுள்ளது.

இந்த விசேட பிரிவின் 2784208 அல்லது 2784537 ஆகிய தொலைபேசி இலக்கத்தினுடனோ, 2784422 என்ற தொலைநகல் இலக்கத்துடனோ தொடர்பு கொண்டு பிறப்பத்தாட்சிப் பத்திரம் இல்லாத மாணவர்கள் பற்றிய தகவல்களை வழங்க முடியுமென பரீட்சைகள் திணைக்களம் தெரிவிக்கின்றது.

அவ்வாறான மாணவர்களுக்கான பதிவு இலக்கமும் பரீட்சை சுட்டெண்ணும் அந்த சந்தர்ப்பத்திலேயே விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என பரீட்சைகள் திணைக்களம் மேலும் குறிப்பிடுகின்றது. (ந-3)

ஓடர் நகைகள் உத்தரவாதத்துடன் 22 கரட்டில் பெற்றிட நாடுங்கள்.
ஆசைப்பிள்ளை அன் சன் நகைமாடம்
இல. 10, பஸ் நிலையம், சங்கானை.
(C-2928)

## முன் அனுமதி கிடைக்காவிட்டா...

தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

யாழ்ப்பாணத்திலிருந்து ஏ-9 வீதியூடாக பஸ்களில் வெளிமாவட்டங்களுக்கு செல்லவுள்ளவர்கள் வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் யாழ் மத்திய பஸ் தரிப்பிடம் மற்றும் காரைநகர், பருத்தித்துறை பஸ் டிப்போக்களில் முன் பதிவு செய்யும் நடைமுறை தற்போதுள்ளது.

எனினும் மேற்படி இடங்களில் முன்பதிவு செய்தும் ரோக்கன் கிடைக்காவிட்டாலும் யாழ் புகையிரத நிலையத்திற்கு காலை 6 மணிக்கு பயணிகள் வந்தால் பஸ்ஸில் செல்ல ரோக்கன் வழங்கப்படும்.

அவசர தேவைகளுக்கு வெளி மாவட்டங்களுக்குச் செல்லும் பயணிகளின் நலன்கருதி தினமும் 50 ரோக்கன்கள் வழங்கப்படுகின்றன.

அத்துடன் பயணிகள் அதிகரித்தால் அதற்கு தகுந்த முறையில் பஸ்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்படும் என்றார்.

இதே வேளை நேற்று 10 பஸ்களில் 500 பயணிகள் வவுனியாவுக்கு புறப்பட்டனர் எனவும் யாழ்.சிவில் நிர்வாக ஒருங்கிணைப்பு அலுவலக இணைப்பாளர் மேஜர் சமந்த தெரிவித்தார். (ந-5)

## ஐ.நா. சபைக் கூட்ட...

மாகாண தேர்தல் மற்றும் ஜனாதிபதியின் உடல் நிலை ஆகியவற்றைக் காரணம் காட்டி இது ரத்துச் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டிருந்தாலும் உண்மையான காரணம் அதுவல்ல என்று வேறு தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே மனித உரிமைமீறல் குற்றச்சாட்டுக்களுக்குள்ளாகி இருக்கும் படையதிகாரிகள் பலருடைய விசாவுக்கான விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டிருக்கிறது.

உதாரணமாக பாதுகாப்பு ஊடகப் பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெலவின் கனடாவுக்கான விசா விண்ணப்பம் கனடிய தூதரகத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இதே போல் மேல்மாகாண முதல்வர் அலவி மௌலானாவினதும் அவரது குடும்பத்தாரதும் பிரித்தானியாவுக்கான விசா விண்ணப்பமும் நிராகரிக்கப்பட்டிருக்கின்றது.

இது தவிர சட்டமா அதிபர் மோகன் பீரிஸ் பிரித்தானியாவிற்கான விசாவுக்காக விண்ணப்பித்த போது அவர் நேர்முகத் தேர்வுக்கு வருமாறு அழைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலைமைகளே ஜனாதிபதி தலைமையிலான குழுவினர் ஐ.நாவுக்கான விஜயத்தை இரத்துச் செய்ததற்கான காரணம் என்று கூறப்படுகிறது. (ந-5)

நாகம்ஸ் சினிமா
சுன்னாகம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு
விக்ரம், ஸ்ரேயா, வடிவேலு மற்றும் பலர் நடித்த...
கந்தசாமி
ரிலீஸ்
காட்சி: 10.45 ,2.45 ,5.30
[C-3140]

## வடக்கிலிருந்து இராணுவம்...

யுத்தம் முடிவுற்ற நிலையில் வட மாகாணத்தில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினரை மீளப்பெறுவது தொடர்பாக பி.பி.சிக்கு வழங்கிய செவ்வி யிலேயே இராணுவத்தளபதி இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் வழங்கிய செவ்வியில்;

**யுத்தம் முடிபுக்கு வந்த நிலையில் வட பகுதியிலிருந்து படையினரை படிப்படியாக விலக்கிக் கொள்ள திட்டமுள்ளதா?**

இல்லை படையினைத்திருப்பி அழைத்துக் கொள்ளுதல் என்று கருத முடியாது. யுத்தம் புரிவதற்கு என்றால் அந்தளவு எண்ணிக்கையான படையினர்தேவைப்படமாட்டார்கள். ஆனால் மக்களிற்கு நூறுவீத பாதுகாப்பினை வழங்குவதற்கும் அரசாங்கத்தின் எதிர் கால அபிவிருத்திச் செயற்பாடு களிற்குமே பெருமளவான படையினர் தேவைப்படுவார்கள் இதுவே எமக்கு இப்போதுள்ள பிரச்சினை. படைநடவடிக் கையில் ஈடுபட்ட படையினர் தற்போது அந்தப்பிரதேசங்களில் மக்களிற்கான முழுமையான பாதுகாப்பு நடவடிக் கைகளிலும் அபிவிருத்திப்பணிகள் மற்றும் மீள்குடியேற்றப்பணிகளிலும் ஈடுபட வேண்டியுள்ளது. எனவே படையினரின் எண்ணிக்கையில் அதிகரிப்பினைஏற்படுத்துவது குறித்து நாம் கவனம் செலுத்துகின்றோம். நாம் அதே பலத்தைத் தொடர்ந்தும் தக்கவைத்திருப்பதற்காக அங்கு தொடர்ந்தும் நிலைகொண்டிருப்போம்.

**கூடுதலான படையினர் நிரந் தரமாகத் தங்குவதற்கு மூகாம்கள் அமைக்கத் திட்டம் உள்ளதா?**

நாம் அந்தப்பிரதேசத்தில் முன்னர் இராணுவ முகாம்களைக் கொண்டிருந்ததில்லை. அந்தப்பகுதியில் சில படையினர் புதர்களிலும் தற்காலிக கூடாரங்களிலுமே தங்கியுள்ளனர்.

எனவே நீண்டகாலத் தீர்வாக அவர்கள் கடமைகளை இலகுவாக முன் னெடுப்பதற்கு வசதியாக நிரந்தர முகாம்களை நாம் அங்கு அமைக்கவேண்டியுள்ளது. அங்கு எத்தனை முகாம்கள் அமைக்கப்படும் என தற்போது கூறமுடியாது. அவர்களிற்கான தலைமையகங்கள், மலசலகூடங்கள் போன்றகட்டமைப்பு வசதிகள் அமைக்கப்பட்டு வருகின்றனர். அரசகட்டடங்கள் போன்ற இடங்களில் தங்கியுள்ள படையினரிற்கு முறையான முகாம்கள் அமைக்கப்பட்டு அதே படையினர் அங்கு தங்கவைக்கப்படுவர். மேலும் தெரிவிக்கையில்; படைநடவடிக்கை வவுனியாவிலிருந்து வடக்கு நோக்கியேமேற்கொள்ளப் பட்டது அங்குநிலக் கண்ணிவெடிகள் தெற்கிலிருந்து வடக் காகவே அகற்றப்பட வேண்டும். தெற்கில் துப்பரவுப்பணிகள் மேற்கொள்ளாமல் கிளிநொச்சியில் எவரையும்திடீரெனகொண்டு சென்று இறக்கிவிட முடியாது. நாம் வவுனியா மற்றும் மன்னார்ப்பிரதேசங்களி லிருந்தே தற்போது கண்ணி வெடி அகற்றும் பணிகளை முன்னெடுத்து வருகின்றோம். (ந-5,14)

திருமண வாழ்த்து
23.08.2009
இல்லறமெனும் நல்லறந்தனில் இணையும்
நீவீர்
மண்டைதீவைச் சேர்ந்த செல்வன் அன்பழகன்
தாவடியைச் சேர்ந்த செல்வி கலைவாணி
மங்கலம் நிறை மனை மாட்சியில்
மாண்புடன் உறவுகள் அன்பு பேணிட
வள்ளுவன் வாசுகி வாழ்ந்த பெருவாழ்வை
வண்ணமாய் பெற்று வளமுடன் வாழ்க.
ஏமது மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்.
கொக்குவில் கிழக்கு கொக்குவில்
அ. ஸ்ரீபத்மராசா (J.P) குடும்பத்தினர்
[C-3150]

படிவம் விற்பனையாகிறது
பயங்கரவாதம் காரணமாக தமது சொந்த இருப்பிடங்களை விட்டு இடம் பெயர்ந்தவர்கள் மீண்டும் சொந்த இடங்களுக்கு குடியேறுவதற்கு பதிவு செய்வதற்கான படிவம்.
பூபாலசிங்கம் புத்தகசாலை,
இல. 4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(C-3148)

நியூ சிற்றி ரேடர்ஸ் (இடமாற்றம்)
மேற்படி ஸ்தாபனம் கஸ்தூரியார் வீதியில் இருந்து 319A,K.K.S. வீதிக்கு மாற்றப்பட்டுள்ளது. சொனி,பனசொனி,சொனிக்கா ரேடியோ, கசற் ரெக்கோடர், சொனி ,பனசொனி டிஜிற்றல் ,DVD பிளேயர் ,Euro gold, டிஸ் T.V,ரிசிவர், வயர் ,அன்ரனா,பூஸ்ரர் ,சொனி,பனசொனிக், LG, கலர் T.V ,கார் ரேடியோ, ஸ்பீக்கர் ,கூரை ,Stand,மேசை மின் விசிறிகள்,500,1000,1500,3000 வட்ஸ் சப்ளைசர்கள் ,சார்ச் லைற், சார்ச் ரோச்,மைரோ லைக் ,Intex வூட்ஸ் ,பவல்ஸ், கிரைண்டர் ,கொட்பிளேட், அயன் ,ரோஸ்டர் ,அவன் ,ரைஸ் குக்கர் ,பிரைசர் குக்கர் , மண்ணெண்ணெய் குக்கர்,கை ,மேசை,சுவர் மணிக்கூடுகள் மற்றும் எலக்ரிக்கல்,எலக்ரோனிக் பொருட்களையும் IC,ஸ்ரான்ஸ்சிஸ்ரர் ,கொன்டென்சர் ஆகிய உதிரிப்பாகங்களை மலிவு விலையில் பெற்றுக் கொள்ளவும் அவற்றை உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ளவும் நாடுங்கள்
நியூ சிற்றி ரேடர்ஸ்,
T.P.:- 021 222 3226
319 A, K.K.S. ரோட், யாழ்ப்பாணம்.
(C-3138)
(மேற்படி ஸ்தாபனத்துக்கு யாழ்.நகரில் வேறு கிளைகள் இல்லை. இத் தாபனம் K.K.S வீதியில் ஸ்ரான்லி ரோட் சந்தியில் இருந்து உட்பக்கமாக 6 ஆவது கடை)

வேலை வாய்ப்பு
வேலை வாய்ப்பை நாடி நிற்கும் துடிப்பான இளைஞர் யுவதிகளுக்கு சிரேஷ்ட அமைப்பாளரின் கீழ் காப்புறுதி ஆலோசகராக யாழ். மண்ணில் 45 வருடங்களாக தொடர்ந்து நிலைத்திருந்து சேவையாற்றி வரும் காப்புறுதி நிறுவனம் ஒன்றில் பணியாற்ற அரிய வாய்ப்பு.
வேலை பற்றி
☆ 1 மாத பயிற்சிக் காலத்தை உடையது.
☆ இக்காலப் பகுதியில் ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்படும்.
☆ பயிற்சி நெறியின் நிபந்தனைகள் பூர்த்தியாகும் பட்சத்தில் நிரந்தரமாக்கப்படுவீர்கள்.
☆ பயிற்சிக் கால முடிவில் தொழில் தகைமை தொடர்பான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
அடிப்படைத் தகைமை
☆ G.C.E.O/L பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாட சித்தி.
☆ 18 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.
தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிபரக் கோவையை (Bio Data) 10.09.2009க்கு முன்னர் கிடைக்கக் கூடிய வாறு கீழ்வரும் விளம்பர இலக்கத்துக்கு அனுப்பவும்.
விளம்பர இல. C-3144
C/O, வலம்புரி
இல.03,02ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(C-3144)

ESOFT இன் மாபெரும் கிரிக்கெட் விருந்து...
யாழ். மண்ணில் ESOFT Computer Studies
இன் ஆரம்ப விழாவை முன்னிட்டு நடாத்தப்படும்
T/20
JOLY STAR Vs K.C.C.C
[C-3147]
திகதி: 23.08.2009
நேரம்: 1.00 Pm
இடம்: யாழ். இந்துக் கல்லூரி மைதானம்

யாழ்மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்
FedEx Express
உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப்பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.
குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்படும்
விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை
குறைந்த கட்டணத்திலான உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P- 2227835
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
TCN EXPRESS
2B, Nelsan Place, Colombo -06
வாடிக்கையாளரின் நலன்கருதி 10% - 25 % விசேட கழிவு
லண்டன், சுவிஸ், பிரான்ஸ் நாடுகளுக்கு 3 கிலோவுக்கு குறையாத பொதிகளிற்கு 1Kg 550/=ரூபா வீதமும், கனடாவுக்கான 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 550/= ரூபா வரையான விசேட சலுகை

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் ரோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.08.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.